

உலகம்

மலர் 14 | இதழ் 09 |
நவம்பர் 2023 | ஆண்டு சந்தா ₹ 100

துரோகம் செய்து தூரம் சென்றாலும் கூட,
தேவனே என்று அலறி கூப்பிட்டால் உடனே...

# நினைத்தருள்வார்

# உள்ளே...



04


12


16


26


32


வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.




**30,000 வாலிபர்கள்**
கையில் தவழும்
வாலிபர் உலகம் பத்திரிக்கை
உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். Youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலும் தொடர்புக்கு 9750955547



**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com




ஆசிரியர்: மோகன் சி. லாசரஸ் இணை ஆசிரியர்: அவினாஷ்

ஆசிரியர் குழு: வயலா | ஜெயசீலன் | ரவி | ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண்

வடிவமைப்பு: டேவிட்சன்.

## அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

# திருவசனம்



**John**னின் தகப்பன் ஒரு நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் அந்த நிலக்கரி சுரங்கத்திற்கு வேலைக்கு போவதற்கு முன்னால் அங்குள்ள சிற்றாலயத்தில் சென்று ஜெபித்து விட்டுச் செல்வார். **John** இதைப் பல நாட்கள் பார்த்து விட்டு ஒருநாள் தன்னுடைய தாயிடம் சென்று, "அப்பா என்ன செய்கிறார்" என்று கேள்வி கேட்டான். "அப்பா இயேசப்பாவிடம் ஜெபம் செய்கிறார், நீயும் அப்படி ஜெபித்தால் ஆண்டவர் உன்னோடு இருப்பார்" என்று அம்மா சொல்லி அனுப்பினார்கள். ஆண்டுகள் பல உருண்டோடின. **John**னுடைய தகப்பன் தாயார் இரண்டு பேரும் மரித்துப் போனார்கள். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, **John,** தன் தகப்பனைப் போல அந்த நிலக்கரி சுரங்கத்தில் சேர்ந்து வேலை செய்து கொண்டிருந்தான். ஒவ்வொரு நாளும் அந்த சிற்றாலயத்திற்குச் சென்று, "**Jesus** நான் **John** வந்திருக்கிறேன்" என்று ஒரு சிறிய ஜெபத்தை செய்வான். ஒருநாள் நிலக்கரி சுரங்கத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஏற்பட்ட விபத்தில் **John** மிகவும் பாதிக்கப்பட்டு **ICU**வில் அனுமதிக்கப்பட்டான். உடம்பு முழுவதும் ஏற்பட்ட பயங்கர காயத்தினால் கை, கால்களை அசைக்க முடியாமல் படுத்திருந்தான். அந்த நிலையிலும் "என்னால் அந்த சிற்றாலயத்திற்கு போக முடியவில்லையே" என்று கலங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது திடீரென்று ஒருநாள் அந்த **ICU** அறையில் ஒருவர் வருவதைப் போல உணர்ந்தான். அதே நேரத்தில் அவன் காதில், "**John** நான் **Jesus** வந்திருக்கிறேன்" என்ற ஒரு சத்தமும் கேட்டது. அவன் அந்த சத்தத்தைக் கேட்டவுடன் மிகவும் சந்தோஷப்பட்டு மகிழ்ந்தான். அந்த நேரமே இயேசு அவனைத் தொட்டு சுகமாக்கினார்.







எனக்கன்பான வாலிபனே! நீ ஆண்டவருக்காய் செய்த எந்தவொரு காரியத்தையும் தேவன் மறப்பதில்லை. மனிதர்கள் உன்னை மறந்தாலும், அவர் உன் மேல் நினைவாய் இருக்கின்றார். ஏனென்றால், அவர் இரத்தம் சிந்தி உன்னை மீட்டுக் கொண்டபடியால், நீ அவருக்கு சொந்தம். உன்னை ஒருவனும் அவர் கையிலிருந்து பிரித்து விடவோ பிடுங்கிவிட முடியாது.

**நீ அவருடைய சொத்து. நீ அவருடைய சம்பத்து.**
உன்னை உலகம் ஏழ்மையாய் எண்ணலாம்,
**உன்னை உற்றார் உதாசீனப்படுத்தலாம்.**
ஆனால் நீ அவர் கையில் அலங்காரமான கிரீடமும்,
**அவர் கரத்தில் ராஜமுடியுமாயிருக்கிறாய்!**

ஆண்டவருக்கு நீ முக்கியம்!
அவர் பணிக்கு உன் அர்ப்பணிப்பு அவசியம்!
செயல்படு, செயல் வீரனாய்!

கிறிஸ்துவின் பணியில்
**அவினாஷ்**

# தலை நிமிர செய்தார்!



சாட்சி தொகுப்பு:ஜாய்லின் ஜான்

கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து, கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டாலும், இளம் வாலிபப் பருவத்தில் போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டதால், பள்ளியிலும், சமுதாயத்திலும் புறக்கணிக்கப்பட்டு, தனிமையை அனுபவித்தபோது, தேவ ஊழியர் மூலம் தேவன் இடைப்பட்டு, இன்றைக்கு எல்லா பாவப் பழக்கங்களிலிருந்தும் விடுதலைப் பெற்று, ஆண்டவருக்காக வைராக்கியமாக இருக்கும் வாலிபரின் வாழ்க்கையில் வந்த மாற்றங்கள் என்ன என்பதை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோமா?

**உங்களது சிறு பிராயத்தைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

எனது பெயர் ரோஷன். நான் வேலூரில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். எனது அப்பா CMCயில் அட்டெண்டராக பணிபுரிந்து வருகிறார். என் அம்மா வீட்டில் இருக்கிறார்கள். எனக்கு ஒரு தம்பி, அவன் B.A. முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறான். கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்ததால் என் பெற்றோரின் கட்டாயத்தினால் ஆலயத்திற்கு ஒழுங்காக சென்று வருவேனேத்தவிர, கிறிஸ்துவைப் பற்றிய அறிவு எதுவும் இல்லை. சபைக்குச் சென்றாலும் ஆராதனை முடியும் வரை இருக்காமல், பாதியிலேயே எழும்பி வருவேன். இப்படி தான் எனது சிறு பருவம் இருந்தது.

**சரி... உங்களது பள்ளிப் படிப்பு மற்றும் இளமைப் பருவம் பற்றிச் சொல்லுங்களேன்?**

நான் பள்ளியில் படிக்கும் போது ஒரு சில நண்பர்களோடு சேர்ந்து பலவிதமான தவறான பழக்கங்களைச் செய்ய ஆரம்பித்தேன். இதனால் என் பெற்றோருக்கு மிகுந்த அவமானத்தைக் கொண்டுவந்தேன். 9ம் வகுப்பு படிக்கும் போதே குடி, புகைப்பிடித்தல் போன்ற பழக்கங்களுக்கு அடிமையானேன். 11ம் வகுப்பு படிக்கும் போது, இன்னும் ஒரு படி உயர்ந்து கஞ்சா போன்ற போதைகளுக்கு அடிமையானேன். ‘‘கஞ்சா போடும்போது தான் ஜாலியாக இருக்கிறது, இதுதான் உலகம்’’ என்பது போல் எனக்குள் ஒரு உணர்வு இருந்தது. ஒருநாள் நான் போதைப் பொருள் உபயோகிப்பது என் பெற்றோருக்குத் தெரியவந்து, எனக்கும் அவர்களுக்கும் கடுமையான வாக்குவாதம் நேர்ந்து, நான் என் அம்மாவை அடித்து விட்டேன். அவ்வளவு பெரிய பிரச்சனையாக மாறியது. அடிக்கடி இதனால் வீட்டில் பிரச்சனை மேல் பிரச்சனை வர ஆரம்பித்தது.

**ஓகே... தொடர்ந்து பிரச்சனைகள் வந்தது... நீங்கள் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று படித்தீர்களா?**

சொல்கிறேன்... என்னைப் பள்ளியிலிருந்து டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். என்னைப் பள்ளிக்கு அனுப்புவதைப் பெற்றோரும் விரும்பவில்லை. என் பெற்றோர் என்னை யாருடனும் பேசவோ, சேரவோ விடாமல் வீட்டில் வைத்திருந்தார்கள். அப்பொழுது நான் மிகவும் தனிமையை உணர்ந்தேன். இங்கிருந்தால் நண்பர்களோடு சேர்ந்து திருந்தமாட்டேன் என்று நினைத்து, கர்நாடகாவில் விடுதியோடு கூடிய ஒரு கல்லூரியில் 3 வருட Diploma course படிக்க என்னைச் சேர்த்து விட்டார்கள்.

**சூப்பர்... அப்படியானால் உங்களுடைய கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்து படித்திருப்பீர்கள்... உங்களுடைய கெட்டப்பழக்கமும் மாறியிருக்கும் அப்படித்தானே?**

இல்லை... கல்லூரியில் சேர்ந்த முதல் நாளே போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டிருந்த ஒருவன் எனக்கு நண்பனாக கிடைத்தான். எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இதற்காகத்தான் நான் கல்லூரிக்கே சென்றேன். அங்கும் என்னுடைய கெட்டப்பழக்கங்கள் அதிகரித்துக் கொண்டே இருந்தன. ஒருநாள் போதைப்பொருளைப் போட்டுக் கொண்டு வீடியோ ஒன்று பார்த்துக் கொண்டிருந்தபொழுது, நண்பர்களாகிய எங்களுக்குள்ளேயே சண்டை வந்து ஒருவரையொருவர் அடித்துக் கொண்டோம். இது கல்லூரிக்கு தெரிய வந்து, என்னைக் கல்லூரியிலிருந்து இடை நீக்கம் செய்து, வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

**அச்சச்சோ... மீண்டும் இடை நீக்கமா! அதன் பிறகு உங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது மாற்றம் உண்டானதா?**

நான் கல்லூரியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு வீட்டிற்கு வந்ததைப் பார்த்த எனது அம்மா மிகவும் அழுதார்கள். இங்கிருந்தால் தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறான், அங்குபோனால் மாற்றம் ஏற்படும் என்று சொல்லி அனுப்பி வைத்தால், அங்கும் இதையே தான் செய்கிறானே என்று மிகவும் அழுவார்கள். அம்மா அழும்போது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். ஒருநாள் வீட்டில் தனிமையாக இருக்கும்போது, ‘‘நான் ஏன் இப்படி இருக்கிறேன்? இதனால் பிரச்சனைக்கு மேல் பிரச்சனை வருகிறதே?’’ என்று எனக்குள் சிறியதாக ஒரு எண்ணம் வர ஆரம்பித்தது. அந்த சூழ்நிலையில் எனது அம்மா தினமும்



என்னை ஜெபிக்க வைத்தார்கள். அப்பொழுதுதான் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சி ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதை நாங்கள் குடும்பமாக பார்ப்போம். ஒரு நாள் மோகன் அங்கிள் ‘‘நீங்கள் ஒரு கஷ்டத்தில் இருக்கிறீர்கள், உங்களுடைய உள்ளம் உடைந்து இருக்கிறது’’ என்று சொன்னார்கள். அப்பொழுது நான் நிகழ்ச்சி பார்த்துக் கொண்டே சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்பொழுது என் மீது தேவ பிரசன்னம் இறங்குவதை நான் உணர்ந்தேன். என் கண்களிலிருந்து கண்ணீர் தாரைத் தாரையாக ஊற்றியது. என்னால் கட்டுப்படுத்த முடியாமல் 15 நிமிடங்கள் அழுதேன். உடனே அம்மா வந்து ‘‘கர்த்தர் உன்னோடு இருக்கிறார், கர்த்தர் உன்னைத் தொடுகிறார், நீ இந்த கெட்டப் பழக்கத்திலிருந்து மாறி விடுவாய், உன்னைக் கல்லூரியிலிருந்து சீக்கிரம் கூப்பிடுவார்கள்’’ என்று சொன்னார்கள்.





**Wow...! இயேசு உங்களைத் தொட்டார்... அதன் பிறகு நீங்கள் கல்லூரிக்குச் சென்றீர்களா?**

நான் தொடர்ந்து ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியைப் பார்த்து வந்தேன். லாக்டவுன் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்வு வந்தது. கல்லூரியிலிருந்து போன் பண்ணி அழைத்தார்கள். 3வது வருடம் படிக்கும்போது இடைநீக்கம் செய்தார்கள். தொடர்ந்து படிக்க வேண்டுமென்றால் 20,000 ரூபாய் அபராதம் கட்டி (Penalty) தொடர்ந்து படிக்கலாம், அல்லது TC வாங்கிக்கொண்டு போங்கள் என்று சொன்னார்கள். நான் ரூபாய் 20,000 கட்டி தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன். தேவனுடைய கிருபையால் 3 வருட டிப்ளமோ படிப்பை முடித்தேன். அதன் பிறகு கொஞ்ச நாட்கள் X-ray டெக்னீஷியனாக பணிபுரிந்தேன்.

**பிரமாதம்... தொடர்ந்து படித்தீர்கள்... அதன் பிறகு உங்களுக்குப் போதைப் பொருட்கள் மீது ஏதாவது ஆர்வம் ஏற்பட்டதா?**

இல்லை... அதற்குப் பிறகு இன்று வரை எந்த போதைப் பொருள் மீதோ, சிகரெட் மீதோ ஆர்வம் வந்ததே இல்லை. தேவன் என்னை முழுமையாக விடுவித்தார். நான் இயேசுவை ஏற்றுக் கொண்ட பின்பு, அதிகமாக ஜெபிக்க ஆரம்பித்தேன். மறுபடியும் நான் வேலூருக்கே சென்றேன். எந்த இடத்தில் அவமானப்பட்டுக் கூனிக் குறுகி வெளியே போனேனோ, அதே இடத்தில் கொண்டு வந்து, ஜெபிக்கிற நல்ல ஐக்கியத்தை கொடுத்து நான் வெட்கப்பட்ட இடத்தில் என் தலையை உயர்த்தி வைத்திருக்கிறார்.

**அருமை...! தலைகுனிந்த இடத்தில் தலையை உயர்த்தின தேவனுக்காக என்ன செய்கிறீர்கள் ?**

நாங்கள் ஒரு சில வாலிபர்களாக இணைந்து சுவிசேஷம் அறிவிக்க ஆரம்பித்தோம். நான் X-Ray டெக்னீசியனாக பணி செய்த போது, சிகிச்சைக்காக வருகிறவர்களுக்கு இயேசுவைப் பற்றி சொல்லி கைப்பிரதிகள் கொடுப்பேன். பழையவைகள் எல்லாம் ஒளிந்து போயின; எல்லாம் புதிதாயின என்ற வார்த்தையின்படி கர்த்தர் என்னை புதிய வாழ்க்கைக்குள் நடத்தித் தொடர்ந்து அவருடைய சுவிசேஷப் பணியை வைராக்கியமாகச் செய்யப் பயன்படுத்தி வருகிறார். வாய்ப்பு கிடைக்கின்ற இடத்தில் எல்லாம் சுவிசேஷம் அறிவித்து வருகிறேன். தற்போது நான் ஒரு சிறு வேலையும் செய்து கொண்டே ஆண்டவரின் ஊழியத்தையும் செய்து வருகிறேன்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**


இந்த நாட்களில் அநேக வாலிபர்கள் உலகக் காரியத்திற்கும், வீணான செயல்களில் ஈடுபட்டும் தங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளரும்போது கிறிஸ்துவானவர் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவித்து, அவருடைய சகல சத்தியத்திற்குள்ளும், நித்திய ஜீவனுக்குள்ளும் நடத்துவார். வாலிப பருவம் மிகவும் முக்கியமான பருவம். அந்த பருவத்தை இழந்துவிட்டால் அதைப் பெறுவது மிகவும் கடினம். வாலிப பருவத்தில் கிறிஸ்துவை அறிந்துகொண்டு அவருடைய வசனத்தின்படி நடந்துகொள்ளும்போது கர்த்தர் பரிசுத்தப்படுத்தி சகலவித ஆசீர்வாதத்தினாலும் நிரப்புவார். வாலிப பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை என்று வேதம் சொல்லுகிறது. வாலிப பிராயத்தில் கர்த்தரைத் தேடுங்கள்! கர்த்தரோடு என்றென்றும் மகிழ்ந்திருப்பீர்கள்!

அன்பான வாலிபர்களே! நீங்கள் எந்த பாவப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்தாலும், இயேசு அவை எல்லாவற்றிலிருந்தும் விடுதலைக் கொடுத்து, சகோதரர் ரோஷனைப் போல உங்களையும் அநேகருக்குச் சாட்சியாக நிறுத்துவார்!



புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை




**கீழேக் கொடுக்கப்பட்டுள்ள நபர்கள் என்ன தொழில் செய்தார்கள் என்பதை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1) கிதியோன் ஒரு ____________________

2) பிலிப்பு ஒரு ____________________

3) கமாலியேல் ஒரு ____________________

4) யூபால் ஒரு ____________________

5) லேவி ஒரு ____________________

6) லீதியாள் ஒரு ____________________

7) சீமோன் ஒரு ____________________

8) ஆக்கில்லா ஒரு ____________________

9) நாத்தான் ஒரு ____________________

10) யோபால் ஒரு ____________________

11) நெகெமியா ஒரு ____________________

12) ஒத்னியேல் ஒரு ____________________

13) தெமேத்திரியு ஒரு ____________________

14) தூபால்காயீன் ஒரு ____________________

15) ஆதாம் ஒரு ____________________

16) நாகமான் ஒரு ____________________

17) கொர்நெலியு ஒரு ____________________

18) நிம்ரோத் ஒரு ____________________

19) ஆசாப் ஒரு ____________________

20) காத் ஒரு ____________________

**கடந்த மாத வெற்றியாளர்:**
சகோதரி சுபிதா, (தேனி)
அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.10.2023**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

## கடந்த மாத விடைகள்

1. c (யோசுவா 14:7-12)
2. e (1 இராஜா. 15:23)
3. g (ஆதி. 5:27)
4. f (2 சாமு. 19:33-35)
5. i (ஆதி. 17:1,5)
6. h (1 இராஜா. 11:3,4)
7. b (ஆதி. 47:28-31)
8. j (1 சாமு. 4:14,18)
9. d (உபா. 34:7)
10. a (1 இராஜா. 1:1)

# தடுமாற்றம் ஏன்?

Heart Beat

எனக்கு வயது 17 ஆகிறது.

நான் 12ம் வகுப்பு படிக்கிறேன். எங்கள் வீட்டில் பக்திக்கு பஞ்சமே இல்லை. எப்பொழுதும் ஜெபமும், வேத வாசிப்பும் இருந்துக் கொண்டே இருக்கும். ஆண்டவருக்காக வைராக்கியமாக வாழ வேண்டும் என்று எனக்கு ஆசை உண்டு. ஆனால் சில நேரங்களில் மொபைல் பார்ப்பது, வீடியோ கேம் விளையாடுவது போன்ற காரியங்களில் நேரத்தை வீணாக்குகிறேன். ஒரு சமயம் என் நண்பன் எனக்கு சில படக்காட்சிகளை மொபைலில் காட்டினான். அவை தவறான, ஆபாசமான படங்கள் என்பதால் நான் பார்ப்பதற்கு மறுத்து விட்டேன். ஆனால் அதற்குபிறகு நான் தனிமையில் இருக்கும் போது, அந்த தவறான காட்சிகள் என் நினைவுக்கு வந்து அதை மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற எண்ணமும், ஆர்வமும் வந்துக் கொண்டே இருந்தது. பரிசுத்தமாய் வாழவேண்டும் என்ற ஆசை ஒருபுறம் இருந்தபோதிலும் இவை என் சிந்தையை பாதித்து விட்டதால், என்னையும் அறியாமல் நான் தடுமாறிவிட்டேன். கடந்த மூன்று மாதங்களாக, தவறான படங்களைப் பார்க்க ஆரம்பித்த எனக்கு, அதை விட்டு விட மனம் இல்லை. ஒருபக்கம் "நீ செய்வது பாவம், இது தவறு" என்று என் காதிலும், இருதயத்திலும் யாரோ சொல்வது போல தோன்றுகிறது. மறுபக்கம் நீ ஒரு பாவி, தவறான வாலிபன் என்ற குற்ற மனசாட்சியும் என்னை வாதிக்கிறது. சில நேரம் இதை பார்க்கக் கூடாது, தவறு என்று தோன்றும். ஆனாலும் என்னையே அறியாமல் மொபைல் எடுத்து தவறான வீடியோக்களைப் பார்க்க ஆரம்பிக்கிறேன். இதனால் என்னால் சரியாக படிக்க முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை. எல்லா பாடங்களிலும் தோல்வி, எதிர்காலம் இருண்டு போனது போல தோன்றுகிறது. என் பெற்றோர் நீ படிப்பை நிறுத்தி விட்டு விவசாயம் செய் என்று சொல்கிறார்கள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நன்றாக படித்து ஒரு IT Software Engineerஆக வேண்டும் என்பதே என் விருப்பம். ஆனால் மீளமுடியாத அடிமைத்தனத்தில் மாட்டியதுபோல் தோன்றுகிறது. என்னை இயேசப்பா மன்னிப்பாரா?

- கெவின், விழுப்புரம்.

ஆலோசனை: அவி



தம்பி கெவின்! உங்களின் வேதனை நன்கு புரிகிறது. ஒரு விபத்தாக பார்த்த காட்சி, இன்று விபரீதமாய் மாறிவிட்டது. உங்களைப்போல இன்றைக்கு அநேக வாலிபர்கள் இந்த பாவத்தில் மாட்டிக் கொண்டு மீள முடியாமல், ஒரு தூண்டிலில் மாட்டிய மீனைப் போல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பிரச்சனையிலிருந்து வெளியே வர முற்பட்டு, இன்னொரு பிரச்சனையில் போய் மாட்டிக் கொள்கிறார்கள்.

ஆனால் கெவின்! இந்தப் பாழும் கிணற்றில் இருந்து உங்களால் நிச்சயம் வெளியே வர முடியும். அதற்குத் தேவையானது உறுதியான தீர்மானமும், ஓய்வில்லாத முயற்சியும் தான்.

முதலில் நீங்கள் இந்த தீய பழக்கத்திலிருந்து வெளியே வர வேண்டும் என்று விரும்ப வேண்டும். காரணம், இந்த அடிமைத்தனம், உங்கள் மன அமைதியை மாத்திரம் பாதிக்காது. உங்களுடைய திறனையும், திறமையையும் பாதித்து உங்களை முடக்கிவிடும். இதுவே உங்கள் படிப்பு பாதிக்கப்பட காரணம்.

அநேகர் ''இந்த பழக்கத்திலிருந்து நான் எளிதில் வெளியே வந்து விடுவேன்'' என்று கூறுவர். ஆனால் அவர்களை முடக்கி செயல்படவிடாமல் மாய்க்கும் ஒரு கண்ணி தான் இந்த பாவ அடிமைத்தனம்.

ஒரு மலைப்பாம்பினால் ஒரு மானை வீழ்த்தவும் முடியாது, விழுங்கவும் முடியாது. காரணம், மானின் வேகத்திற்கு முன்னால் மலைப்பாம்பின் வேகம் ஒன்றுமில்லை, ஏணி வைத்தாலும் எட்டாது. ஆனால் மலைப்பாம்பு மானின் காலை கவ்வி விட்டால் வாய்ப்பு உண்டு. காரணம், மலைப்பாம்பு தான் தாக்கும் எந்த ஒரு விலங்கையும் கவ்விய பிறகு, மிக வேகமாக அந்த விலங்கை தன் உடம்பையும், வாலையும் பயன்படுத்தி சுற்றி, அதின் எலும்புகளை முறிக்கும் ஆற்றல் கொண்டது. பின்னர் அதை மூச்சு திணற வைத்து, தன்னுடைய சிறிய வாயை, பெரிதாக பிளந்து உயிரோடே அந்த விலங்கை விழுங்க ஆரம்பிக்கும். இந்த பாவப் பழக்கமும் ஒரு மலைப்பாம்பை போன்றது தான், நம்மை கவ்வி விட்டால் விழுங்காமல் விடாது.

**இந்த பாவப் பிடியிலிருந்து வெளியே வர விரும்பினால் முதலில் உங்கள் மொபைலுக்கும் உங்களுக்கும் சில Rules போட வேண்டும்.**

- இரவு 9:00 மணிக்கு மேல் மொபைலை Switch Off செய்வேன்.
- Google settingsல் safe browsing மற்றும் safe searchஐ enable செய்து வையுங்கள். இது தேவையற்ற இணையதளங்களுக்கு உங்களைக் கொண்டு செல்லாது.
- படிப்பு சம்பந்தமானாலும், இரவு 9:00 மணிக்கு பிறகு, மொபைலை தொடமாட்டேன்.
- சில தேவையற்ற third party Appsகளை Delete செய்யலாம்.
- Unwanted Videos, Whatsapp, Facebook அல்லது Instagramல் வந்தாலும் பார்க்க மாட்டேன் என்ற தீர்மானம் எடுங்கள்.
- தனிமையில் இருப்பதை முற்றிலுமாக தவிர்த்துவிடுங்கள்.
- Mobile Settingsல் Digital well beingஐ on செய்து, எல்லா Appsக்கும் ஒரு சிறிய time set பண்ணலாம். அதனால் அளவிற்கு அதிகமாய் Use பண்ண வாய்ப்பு இல்லை.

இப்படி உங்களை ஒரு ஒழுங்குக்கு கொண்டு வரும் போது, உங்கள் சிந்தனையையும், இருதயத்தையும் கறைபடாமல் காக்க முடியும். படிப்பில் கவனம் செலுத்தி, உங்கள் கனவாகிய IT Software Engineering என்ற ஆசை இலக்கை அடையவும் முடியும். யாரெல்லாம் ஆவியில் சோர்ந்து போய் இருக்கிறார்களோ, அவர்களை சாத்தான் பாவம் செய்யத் தூண்டுவான். **அநேக நேரம் சாத்தான் சோதிப்பது, ஆண்டவருக்காக வைராக்கியமாய் வாழ விரும்பும் வாலிபர்களைத் தான்.**

**எனவே கெவின், "இயேசப்பா என் பாவத்தை மன்னியுங்கள், என்னை பரிசுத்தமாக்குங்கள், இனி பாவம் செய்யாமல் காத்துக் கொள்ளுங்கள்" என்று ஜெபியுங்கள். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து ஆண்டவரை துதித்து, வேதம் வாசித்து விட்டு உங்களை பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குள்ளாக ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள். உங்களால் பெரிய மாற்றத்தையும் வெற்றியையும் பார்க்க முடியும்.**

தேவையற்ற நேரங்களில் phone எடுக்கவேண்டும் என்று தோன்றும்போது வேதத்தை எடுத்து வாசிக்க முயற்சி செய்யுங்கள். வேதம் வாசிக்கும்போது கர்த்தருடைய வார்த்தை உங்கள் சிந்தையை ஆட்கொண்டு, இருதயத்தில் ஒரு சமாதானத்தையும், பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்ற ஆசையையும் கொடுக்கும்.

**"என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்" (கலா. 4:19) என்று பவுல் சொல்வது போல, நம்முடைய வாழ்க்கையில் நாமும் இயேசு கிறிஸ்துவைப் போல பரிசுத்தமாய் வாழவும், பழைய மனுஷனின் சாயல் மாறி கிறிஸ்துவின் சாயலில் உருவாகவும் தேவன் விரும்புகிறார்.**

**சத்துரு எத்தனை முறை போராடி நம்மைத் தோற்கடிக்க நினைத்தாலும், ஆண்டவர் நம்மை பெலப்படுத்தி வெற்றி சிறக்கப் பண்ணுவார். ஜெபித்து செயல்படுங்கள்!!**

முகப்பு செய்தி: சதீஷ்

# நினைத்தருள்வார்!



நம் வாழ்க்கையில் சில விஷயங்களை நீண்ட நாட்களுக்கு நினைவில் வைத்துக் கொள்கிறோம். ஆனால் சிலவற்றை குறுகிய காலத்தில் மறந்து விடுகிறோம். இன்று வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சி மனிதனின் நினைவாற்றலை நாளுக்கு நாள் பாதித்துக் கொண்டே வருகிறது என்றுதான் சொல்ல வேண்டும். செல்போன் வருவதற்கு முன்பு அனைவரின் வீட்டுத் தொலைபேசி எண்களையும் நினைவில் வைத்து மனப்பாடமாக சொன்னவர்கள், இன்று நெருக்கமான 10 பேரின் தொலைபேசி எண்களைக்கூட நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை. இயந்திரமயமான சூழலில் வாழும் இவ்வுலகில் சில நேரம் பெற்றோர்கள் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோர்களையும் நினைத்துப் பார்க்காமல் மறந்து விடுகிறார்கள். அந்த அளவிற்கு மனுக்குலம் வேகமாக செல்கிறது. ஆனால் எல்லாவற்றையும் படைத்த ஆண்டவர் எப்போதும் நம் நினைவாக இருக்கிறார். இன்றைய நவீன உலகில் உங்களைச் சுற்றி இருக்கும் நண்பர்களும், உற்றார் உறவினர்களும் ஏன் பெற்றோர்கள் கூட மறந்து போகலாம், ஆனால் நம்மை மறவாதவர் ஒருவர் உண்டு அவர்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.



நம்முடன் நெருக்கமாக இருக்கும் உறவுகள் கூட சில நேரங்களில் நம்மை மறந்து விடுவார்கள். தாவீதின் வாழ்வில் அவருடைய எதிர்காலத்தைக் குறித்த யோசனைகளும் அக்கறையும் அவரின் பெற்றோருக்கும் உடன் பிறந்தவர்களுக்கும் இல்லாமல் போய் இருக்கலாம். ஆனால் ஆண்டவருக்கு தாவீதின் எதிர்காலத்தைக் குறித்த திட்டமும் நோக்கமும் இருந்தது. நீங்கள் உயர்த்தப்பட்ட நிலையில் இருக்கும்போது உங்களை நினைப்பவர்கள் அநேகர் இவ்வுலகில் இருப்பார்கள். இஸ்ரவேலின் இராஜாவை அபிஷேகம் பண்ணும்படி கர்த்தரால் அனுப்பப்பட்ட சாமுவேலின் சிந்தைக்கு, தாவீதின் சகோதரர்களே ராஜாவாக தெரிந்தனர். ஆனால் கர்த்தரோ, எல்லோராலும் ஒதுக்கப்பட்ட தாவீதையே இஸ்ரவேலின் ராஜாவாக நினைத்தருளினார். நீங்கள் தாழ்வில் இருக்கும் போது உங்களை விசாரிக்கிறவரும் நினைப்பவரும் கர்த்தர் ஒருவரே என்பதை மறந்து விடாதீர்கள். நம்முடைய வாழ்வில் பிரச்சனைகளும், போராட்டங்களும், தேவைகளும் வரும் போது நம்மை சுற்றி இருக்கும் மனிதர்கள் நம்மை மறந்து போவார்கள். ஆனால் கர்த்தர் என்றும் நம்மை மறவாமல் நினைத்தருள்வார். அதனால்தான் அவர் சொல்கிறார், **“ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை” (ஏசாயா 49:15).**



சில நேரங்களில் நம்மிடமிருந்து நன்மை பெற்றவர்களும், நம்மை மறந்து போகும் போது வேதனை கொள்கிறோம். சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பார்வோனின் பிரதானிகளை கவனிக்கும்படி யோசேப்பு நியமிக்கப்பட்டான். அவர்கள் இருவருக்கும் வந்த சொப்பனத்தினிமித்தம் அவர்களின் முகம் துக்கமாயிருப்பதைக் கண்டு யோசேப்பு அவர்களை விசாரித்து அதற்கு விளக்கம் கொடுத்தான். அதுமட்டுமின்றி, **“நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து (சிறைச்சாலை) என்னை விடுதலையாக்கவேண்டும்” (ஆதி. 40:14)** என்று பிரதானியை வேண்டிக் கொண்டான். பிரதானி, யோசேப்பு தனக்கு செய்த நன்மையை மறவாமல் நினைத்து பார்த்து எப்படியும் அவனை அந்த சிறைச்சாலையிலிருந்து விடுவிப்பான் என்று நினைத்துக் கொண்டிருந்தான் ஆனால் நடந்தது என்ன தெரியுமா? **“பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான்” (ஆதி. 40:23).**

உலகமும் மனிதரும் நம்மை நினையாமற் போனாலும், பட்சபாதமற்ற தேவன், தம்மை உண்மையாகத் தேடுகின்ற ஒவ்வொருவரையும் மறவாமல் நினைத்தருள்வார். இரண்டு வருடங்கள் சென்ற பின்பு யோசேப்பை நினைத்தருளின ஆண்டவர் பார்வோனை தூங்கவிடாமல் தன்னை மறந்துபோன அதே பானபாத்திரக்கார தலைவன் மூலம் எகிப்தின் அரண்மனைக்கு யோசேப்பைக் கொண்டு சென்று உயர்த்தினார். நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் கலங்காதீர்கள்! உங்களை நினைத்து உங்களை ஆசீர்வதிக்கிற ஆண்டவர் உங்களுக்கு உண்டு என்பதை ஒருநாளும் மறந்து விடாதீர்கள். **“கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்” (சங்.115:12)** என்ற வார்த்தைகளின்படி யோசேப்பை மறவாமல் நினைத்தருளின தேவன் உங்களையும் நினைத்தருள்வார்.

எனக்கன்பான வாலிபர்களே! நான் உன்னை மறக்கவே மாட்டேன் என்று சொல்லும் நண்பர்களும், உற்றார் உறவினர்களும் ஏதோவொரு சூழ்நிலையில் உங்களை மறந்து போகலாம். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்றைக்கும் உங்களை மறவாத தேவன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தாவீது, யோசேப்பைப் போல நீங்கள் இந்த உலகத்தால் ஒதுக்கப்பட்டு மறக்கப்பட்டு உள்ளீர்களா? கவலைப்படாதீர்கள்! **“நீ என்னால் மறக்கப்படுவதில்லை” (ஏசாயா 44:21)** என்று சொல்லும் ஆண்டவர் உங்களை மறவாமல் நினைத்தருளி ஆசிர்வதித்து உயர்த்துவார்.

பொன்னேரியில் வாலிபர் எழுப்புதல் கூடுகை

நாள்: நவம்பர் 26, ஞாயிறு
நேரம்: மாலை 3 மணி முதல்

இடம் : A.S.K Mahal, வரதப்பநாயக்கன் தெரு, பொன்னேரி



செய்தியும், ஜெபமும்:
சகோ. அவினாஷ்

தொடர்புக்கு: 8190821599, 9488847535

சாதனை: சுமா

# தொடர்ந்து போராடினால்... வெற்றி நிச்சயம்!








இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். வாழ்க்கை பயணம் என்பது அனைவருக்கும் விலைமதிப்பில்லாத பயணம் ஆகும். இந்த வாழ்க்கை பயணத்தில் பயணிக்கும் எல்லோரும் வெற்றியாளர் ஆவதில்லை. எத்தனை தோல்விகள் மற்றும் ஏமாற்றங்கள் வந்தாலும், அவைகளை வெற்றிக்கு போடப்படும் பாதைகளாக மாற்றுபவர்களால் மட்டுமே சாதனையாளராக மாற முடியும். அப்படி சாதனையாளராக வலம் வந்துக் கொண்டிருக்கும் ஒருவரின் வாழ்க்கை பயணம் உங்களுக்காக.

தீப் கால்ரா தன்னுடைய இளமைப் பருவத்தில் படிப்பில் அதிக கவனம் செலுத்தி தன்னுடைய கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு நல்ல சம்பளத்துடன் கூடிய வங்கித் துறையில் வேலைக்கு அமர்ந்தார். கை நிறைய சம்பளம் வாங்கி உற்சாகத்துடன் மூன்று வருடங்களை கழித்தார். பின்னர் வங்கி வேலை தனக்கு ஏற்ற வேலை இல்லை என்பதை உணர்ந்து, மனதுக்கு பிடித்த மற்றும் சவால்கள் நிறைந்த வேலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்.

வங்கி வேலையை விட்டு முதலாவது ஒரு அமெரிக்க நிறுவனம் ஒன்றில் பணியில் சேர்ந்தார். சில நாட்களுக்குப் பின்பு அதுவும் தனக்கு ஏற்ற வேலை அல்ல என்று முடிவு செய்து, இந்த பணியில் இருந்தும் வெளியேறினார். அதன் பிறகு தீப்பின் அடுத்த இலக்காக அமெரிக்க நிறுவனமான ஜி.இ கேபிடலில் பணிக்கு சேர்ந்து இந்த பணியில், **Internet or Online** தான் இனி பெரிய புரட்சியை ஏற்படுத்த முடியும் என்பதை தீப் கால்ரா அறிந்து கொண்டார். எனவே தன்னுடைய வணிகமும் **Online**-ஐ அடிப்படையாகக் கொண்டு இயங்கினால், அது பெரிய மாற்றத்தை தன் வாழ்வில் கொண்டு வரும் என்பதை உணர்ந்து ஜி.இ கேபிடல் நிறுவனத்தில் இருந்தும் இராஜினாமா செய்தார். முழுவதுமாக சொந்த தொழில் செய்யப் போவதாக முடிவு செய்தார்.

எந்த தொழிலை ஆரம்பிக்கலாம் என்று தீப் எல்லாத் துறைகளையும் ஆராய்ந்து கொண்டிருந்த போது, அவரது கவனம் சுற்றலாத் துறையில் சென்றது. இந்திய மக்கள் தங்களுடைய டிக்கெட்டுகளைப் பெறுவதற்கு டிக்கெட் கவுன்டர்களில் மணிக்கணக்கில் காத்திருப்பதை கவனித்த தீப், இந்த பிரச்சனையை சரி செய்து மக்களின் சிரமம் மிகுந்த பயணத்தை எளிதாக மாற்றும் வகையில் ஒரு இணையதளம் தொடங்க முடிவு செய்தார். ஒரு நிறுவனத்தின்

நிதியுதவியுடன் தன்னுடைய நண்பர்களை இணைத்து ஒரு இணையதளத்தை தொடங்கினார். தன்னுடைய இணையதளத்திற்கு **MakeMyTrip** என்று பெயரிட்டார்.

முதல் இரண்டு வருடங்கள் **MakeMyTrip** இணையதளம் பெரியதொரு வருமானத்தை ஈட்டவில்லை. மீண்டும் முதலீடு செய்யவும் எவரும் முன்வரவில்லை. நிறுவனத்தின் நிலை மிகவும் மோசமான சூழ்நிலையில் சென்றுக் கொண்டிருந்தது. ஆனால் தீப் விடாமுயற்சியோடு தொடர்ந்து போராடி ஒரு சீரான நிலமைக்கு நிறுவனத்தைக் கொண்டு வந்தார். நாட்கள் போகப் போக தன்னுடைய நிறுவனம் தோல்வியை மறந்து, மிக வேகமாக முன்னேறத் தொடங்கியது. சில ஆண்டுகளிலேயே 2,00,000ற்கும் அதிகமான வாடிக்கையாளர்களைப் பெற்று, மிகப்பெரிய வருவாய் ஈட்டத் தொடங்கியது. பயணம் செய்யும் அனைவருக்கும் ஒரு நண்பனாக மாறியது. ஆண்டுகள் செல்ல செல்ல தீப்பின் வளர்ச்சி வளர்ந்துக் கொண்டே வந்தது. இன்று உயர்ந்து வெற்றியின் பாதையில் தொடர்ந்து பயணித்துக் கொண்டே இருக்கின்றது.



*அன்பான வாலிபர்களே! நம்முடைய இலக்கு எப்பொழுதும் முன்னேற்றப் பாதையில் தான் இருக்க வேண்டும். எவ்விதமான போராட்டங்கள் வந்தாலும் நம்முடைய இலக்கை விட்டு மாறக் கூடாது. தொடர்ந்து போராடி பயணித்தால் உங்களின் வாழ்க்கையும் அநேகருக்கு வெற்றிப் பாதைக்கு வழிகாட்டியாக மாறும்.*

# NEPENTHES (ஜாடி தாவரம்)

## பூச்சிகளை உணவாக கொள்ளும் தாவரம்



நெப்பென்தஸ் என்பது ஒரு அழகான தாவரம். இதற்கு ஜாடி தாவரம் என்ற இன்னொருப் பெயரும் இருக்கிறது.
இதன் இலையின் முக்கிய நரம்பிலிருந்து ஒரு நீண்ட பாகம் வளர்ச்சியடைந்து ஜாடிப்போல் காணப்படும். ஜாடியின் வாய் பக்கத்தில் இனிப்பான திரவம் சுரக்கும். அதற்கு ஒரு மூடியும் உண்டு. அதன் மூடி பார்ப்பதற்கு அழகானப் பூவை போல் இருக்கும். பூச்சிகள் அதை பூ என்று எண்ணி ஜாடியின் வாய் பக்கத்தில் வந்து உட்கார்ந்தவுடன் அது வழுக்கி ஜாடியின் அடிப்பக்கத்தில் விழுந்து விடுகிறது. உடனே ஜாடியின் மூடி தானாகவே மூடிக் கொள்ளும். மாட்டிக்கொண்ட பூச்சி சிறிது நேரத்தில் இறந்து விடும். ஜாடிக்குள் இருக்கும் திராவகத்திற்குள் செரிக்கும் சக்தி இருப்பதால் அந்தப் பூச்சியை செரித்து அதை செடிக்கு சத்துணவாக மாற்றிவிடுகிறது.

இதேபோல் தான் பாவமும், முதலில் பார்வைக்கு அழகாக தோன்றும். பின்பு அதன் அருகில் இழுத்து இறுதியில் அழிவுக்கு நேராக கொண்டு போய்விடும்.

ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறதுபோலும், அவளுக்குப் பின்னே போனான்; அம்பு அவன் ஈரலைப் பிளந்தது (நீதி. 7:23).

**வாலிபர்களாகிய நீங்கள் கவர்ச்சி என்ற பேரில் சிக்கி சாத்தானின் கண்ணிக்குள் விழாதபடி எச்சரிக்கையாயிருங்கள்!**



# குறைவு நிறைவாகும்!


செய்தி: மோகன் சி. லாசரஸ்

"தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி. 4:19). இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற குறைவுகளை நிறைவாக்க, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து விருப்பத்தோடு இருக்கிறார். அன்றைக்கு குறைவுபட்ட கானாவூர் திருமண வீட்டில் நிறைவாக்கக்கூடிய இயேசு கிறிஸ்து இருந்ததைப் போல இன்றைக்கு உங்கள் குறைவுகளை நிறைவாக்கி உங்களை ஆசீர்வதிக்க உங்கள் அருகில் அவர் நின்று கொண்டிருக்கிறார்.

*உங்கள் குறைவுகள் நிறைவாக்கப்பட நீங்கள் செய்ய வேண்டிய சில காரியங்கள்...*

## குறைவை ஒத்துக் கொள்ளுங்கள்!

கானாவூர் திருமண வீட்டில் திராட்சை ரசம் குறைவுபட்டு போனது, அந்த திருமண வீட்டார் ''வந்திருக்கிற எல்லா மக்களுக்கும் திராட்சை ரசம் கொடுக்க வேண்டுமே என்ன செய்வது" என்று கலங்கினார்கள். ஆனால் திராட்சை ரசம் குறைவுபட்டதை மறைத்து வைக்காமல், குறைவுபட்ட செய்தி அந்த திருமண வீடெங்கும் பரவ ஆரம்பித்தது. ஆகவே தான் அந்தச் செய்தி அந்த திருமண வீட்டிற்கு வந்திருந்த இயேசு கிறிஸ்துவின் காதிற்கு எட்டி, அந்த அற்புதம் நிகழ்வதற்கு காரணமாக அமைந்தது.



அவர்கள் தங்கள் குறைவை தங்களுக்குள்ளேயே மறைத்து வைத்திருப்பார்களேயானால், அங்கு அந்த அற்புதம் நடந்திருக்க முடியாது. அநேக ஜனங்கள் தாங்கள் குறை உள்ளவர்கள் என்பதை உணராமல் இருப்பதும், பரிசுத்தம் இல்லாமல் இருந்தும் தங்களை பரிசுத்தவான்களைப் போல வெளியே காட்டிக் கொள்வதும், சமாதானம் இல்லாமல் இருந்தும் தாங்கள் சமாதானமாக இருப்பதைப் போல காட்டிக் கொள்வதும், மற்றவர்களோடு ஐக்கியம் இல்லாமல் இருந்தும் வெளியில் யாவரும் ஐக்கியமாக இருப்பவர்களைப் போல் நடித்துக் கொண்டிருப்பதும், பலவிதமான பிரச்சனைகள், பாரங்கள், வியாதிகள், தேவைகள் இருந்தும், எல்லாவற்றிலும் சம்பூரணமாக இருப்பதைப் போல எண்ணிக் கொண்டு தங்கள் குறைவை உணராமல் இருக்கிறதைப் பார்க்கிறோம். இதின் நிமித்தமாகவே அநேகர் கர்த்தர் தரும் ஆசீர்வாதத்தை இழந்து போகிறார்கள். ஆகவே உங்கள் குறைவை ஒத்துக் கொள்ளுங்கள். உங்கள் குறைவுகள் எதுவாக இருந்தாலும் அதை நீங்கள் உணர்வீர்களானால் இன்றைக்கே உங்கள் வாழ்க்கையில் அற்புதம் நடக்க ஆரம்பித்து விடும்.

## குறைகளை இயேசுவிடம் சொல்லுங்கள்!

கானாவூர் திருமண வீட்டில் திராட்சை ரசம் குறைவுபட்ட போது, இயேசு கிறிஸ்துவிடம் அவருடைய தாயார் வந்து, 'அவர்களுக்கு திராட்சை ரசம் இல்லை' **(யோவான் 2:3)** என்று சொன்னார்கள். அந்த வார்த்தை தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அங்கே ஒரு அற்புதத்தைச் செய்யத் தூண்டியது. அந்தக் குறையை

அவரிடத்தில் கொண்டு வராமல் இருந்திருந்தால், அங்கே அற்புதம் நடந்திருக்காது. ஏனென்றால், குறைவுகளை நிறைவாக்கக் கூடிய வல்லமை பொருந்தியவர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் தான்! சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அந்த செய்தி கொண்டு செல்லப்பட்டபோது, அவர் அந்த குறைவை நிறைவாக்கி அங்கிருந்த எல்லோரையும் சந்தோஷப்படுத்தினார்.

இன்றைக்கு அநேக மக்கள் தங்கள் குறைவுகளையும், பிரச்சனைகளையும், தங்கள் நண்பர்களிடத்திலும், பக்கத்து வீட்டுக்காரர்களிடத்திலும் சொல்லி வேதனைப்பட்டு, அழுது கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம். உங்கள் குறைவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கு இயேசு கிறிஸ்துவைத் தவிரச் சரியான நபர் ஒருவரும் இல்லை. காரணம் அவர் ஒருவர் தான் உங்கள் மீது மிகவும் அக்கறை உள்ளவர். உங்களை அன்போடு கூட விசாரிக்கிறவர் **(I பேதுரு 5:7)** உங்களை அதிகமாக நேசிக்கிறவர் **(I யோவான் 4:19)** உங்களுக்காக தன்னுடைய ஜீவனையே கொடுத்தவர் **(ரோமர் 5:8)**. ஆகவே உங்கள் குறைவுகள் எதுவாக இருந்தாலும், உள்ளத்தின் பாரங்கள் எதுவாக இருந்தாலும், தைரியமாக அவரிடத்தில் சொல்லுங்கள். அவர் உங்களை ஒருபோதும் தவறாகப் புரிந்து கொள்ளவே மாட்டார்.



சகேயு தன் பாவங்களை மறைக்காமல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் சொன்னார் **(லூக்கா 19:8)**. ஆகவே தான் அவருடைய குடும்பம் இரட்சிக்கப்பட்டது. ''மோசே நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவன்'' **(யாத். 4:10)** என்று தன்னுடைய பலவீனத்தை மறைக்காமல் தேவனாகிய கர்த்தரிடத்தில் சொன்னார். பாருங்கள், அவரைத்தான் தேவனாகிய கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்தினார். மனக்கிலேசமடைந்திருந்த அன்னாள் தன்னுடைய இருதயத்தைத் தேவனாகிய கர்த்தருடைய சமூகத்தில் அப்படியே ஊற்றி விட்டாள் **(I சாமுவேல் 1:15)**. ஆகவேதான் அவள் மிகுந்த சமாதானத்தோடு திரும்பிச் சென்றாள். அதேபோல நீங்களும் உங்கள் பாவங்களையும் உங்கள் குறைவுகளையும் உங்கள் தேவைகளையும் பகிர்ந்து கொள்வதற்குச் சரியான இடம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய சமூகம் மாத்திரமே. அவரிடத்தில் எதையுமே மறைக்காதீர்கள். உங்கள் நிலமைகளை அப்படியே அவரிடத்தில் சொல்லி விடுங்கள். அற்புதம் செய்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையை உங்களுடைய வாழ்க்கையிலும் நீங்கள் உணரலாம்.

## இயேசு சொல்கிறபடி செய்யுங்கள்!

கானாவூர் திருமண வீட்டில் திராட்சை ரசம் குறைவுபட்ட செய்தியை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் சொன்ன அவருடைய தாயார், அங்கிருந்த வேலைக்காரர்களுக்கு, ''அவர் (இயேசு) உங்களுக்கு என்ன சொல்கிறாரோ, அதன்படி செய்யுங்கள்'' **(யோவான் 2:5)** என்கிற ஒரு கட்டளையைக் கொடுத்தார்கள். அந்தக் கட்டளைக்கு அந்த வேலைக்காரர்கள் அப்படியே கீழ்படிந்தார்கள். ஆகவேதான் அவர்களால் அங்கே ஒரு அற்புதத்தைப் பார்க்க முடிந்தது!

இன்றைக்கும் அதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களிடத்தில் என்ன செய்யச் சொல்கிறாரோ, அதன்படியே செய்யுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்க்கையில் அற்புதங்களைக் காண்பீர்கள். அவர் உங்களிடத்தில், விட்டு விடச் சொல்லும் காரியங்களை விட்டு விடுங்கள்! கைக்கொள்ளச் சொல்கிற காரியங்களை அப்படியே கைக்கொள்ளுங்கள்! உங்களால் செய்ய முடியாத காரியங்களைச் செய்யும்படியாக, அவர் ஒரு நாளும் உங்களிடத்தில் சொல்லவே மாட்டார். ஏனென்றால், உங்களுடைய நிலமை முழுவதையும் அவர் நன்றாகவே அறிந்திருக்கிறார்! தன் பிள்ளையின் தலையில் பாரத்தை ஏற்றுகிற ஒரு தாய், தன் பிள்ளையால் இவ்வளவுதான் சுமக்க முடியும் என்பதை அறிந்திருக்கிறதுபோல, உங்களால் இவ்வளவுதான் செய்ய முடியும் என்பதை, உங்கள் பரம தந்தையாகிய இயேசு கிறிஸ்து நன்றாக அறிவார்.

சில சமயங்களில், அவர் சொல்கிற காரியங்கள் உங்களால் நம்பக் கூடாததாகக் கூட இருக்கலாம்! ஆனால், விசுவாசத்தோடு அதற்குக் கீழ்படிந்துவிடுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அங்கிருந்த வேலைக்காரர்களிடத்தில், கற்சாடிகளில் வெறும் தண்ணீரை நிரப்பச் சொன்னது மாத்திரமல்ல, ''அந்தத் தண்ணீரை மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போய் கொடுங்கள்.'' என்று சொன்னார். பாருங்கள், அந்த வேலைக்காரர்களும், ''நாம்தானே இப்பொழுது இந்த ஜாடிகளில் எல்லாம் தண்ணீரை நிரப்பினோம்! இந்தத் தண்ணீரை மொண்டு பந்திக்குக் கொண்டு போகச் சொல்கிறாரே!'' என்று சொல்லி முறுமுறுக்கவில்லை. அவருடைய வார்த்தையை அப்படியே அவர்கள் விசுவாசித்தார்கள். அவர்களுடைய அந்த விசுவாசம்தான் வெறும் தண்ணீரை திராட்சை ரசமாக மாறச் செய்தது!

அன்பு வாலிபர்களே, உங்கள் விசுவாசமே உங்களை அற்புதங்களைக் காணச் செய்யும்! சந்தேகப்படாமல், அவருடைய வார்த்தையை அப்படியே விசுவாசித்துவிடுங்கள். நிச்சயம் அற்புதத்தைக் காண்பீர்கள்!

# யெப்தா



வேதாகம கதாபாத்திரம்: பெனிட்டா


"வேதாகம கதாபாத்திரங்கள்" என்ற தலைப்பில் கடந்த மாதங்களில் ஒத்னியேல், ஏகூத், சம்கார், தெபொராள், கிதியோன் போன்ற நியாயாதிபதிகளைப் பற்றி நீங்கள் வாசித்து அறிந்து கொண்டிருப்பீர்கள். இந்த மாதம் நாம் பார்க்கவிருக்கும் நியாயாதிபதியின் பெயர் "யெப்தா". நியாயாதிபதிகள் 11, 12ம் அதிகாரங்களில் இவரைப் பற்றி எழுதப்பட்டுள்ளது.

## அறிமுகம்

- 'யெப்தா' என்பதற்கு 'அவர் திறப்பார்' என்று பொருள். இவன் கிலெயாத்துக்கும் ஒரு பரஸ்திரீக்கும் பிறந்த மகன்.
- இவன் இஸ்ரவேலின் 7வது நியாயாதிபதியாக இருந்து 6 வருடங்கள் நியாயம் விசாரித்தான்.
- தாயார் வேசி என்பதால் பாரம்பரிய சொத்தில் இவனுக்குப் பங்கு இல்லை என்று சொல்லி தன் சகோதரர்களால் வீட்டை விட்டு விரட்டப்பட்டான் (நியா. 11:1-2).
- அதினால் இவன் தோப் தேசத்திலே குடியிருந்தான். இவனுக்கு ஒரே ஒரு குமாரத்தி இருந்தாள்.
- ஆனால் இவன் பராக்கிரமசாலியாகவும் ராணுவ தந்திரங்கள் தெரிந்த வீரனாகவும் இருப்பதைக் கண்டு இவன் குடும்பத்தார் திரும்பி வந்து அம்மோன் புத்திரரோடு யுத்தம் செய்ய தங்கள் சேனைகளை நடத்தும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.

## சிறந்த குணாதிசயங்கள்

- யெப்தா தன் காரியங்களையெல்லாம் கர்த்தருடைய சந்நிதியிலே சொல்லும் வழக்கமுடையவனாயிருந்தான் (நியா. 11:11).
- தன் வாக்கை நிறைவேற்றும் மனிதனாக இருந்தான். அவன் தேவனிடத்தில் செய்த பொருத்தனையினிமித்தம் தனது ஒரே மகளை கன்னியாகவே இருக்கும்படி கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தான் (நியா. 11:30-39).
- போரை தடுத்து நிறுத்த அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி சமாதானம் செய்ய முயன்றான் (நியா. 11:14-27).
- விசுவாச வீரர்களின் பட்டியலில் இவன் குறிப்பிடப்பட்டிருக்கிறான் (எபி. 11:32).
- தேவனுடைய ஆவியினால் நடத்தப்பட தன்னை ஒப்புக்கொடுத்தான் (நியா. 11:29).
- சிம்சோனைப் போல் யெப்தா தேவனுடைய வல்லமையின் கருவியாக இருந்தான்.
- யெப்தாவின் சிறப்பும், அவனுக்குக் கிடைத்த வெற்றிகளும், சவுலின் ஆட்சிக்காலம் வரை பல ஆண்டுகளுக்கு அம்மோனியரின் படையெடுப்பை நிறுத்தி வைத்தது.



## பெலவீனம்

யெப்தா பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் செய்த பொருத்தனை அவனை மட்டுமின்றி தன் குடும்பத்தையும் மிகுந்த துக்கத்திற்குள் ஆழ்த்தியது. இதனால் யெப்தாவின் மகள் தன் வாழ்நாளெல்லாம் புருஷனை அறியாதிருந்தாள் (நியா. 11:30-39). அவனுக்கு சந்ததியும் இல்லாமல் போயிற்று.




சிறப்புக் கட்டுரை: ரவி

# நினைவாய் இருப்பார்!

என் அன்பிற்குரிய தம்பி தங்கைகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். நீங்கள் அதிகமதிகமாய் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் வளர வேண்டும் என்று உங்களை வேண்டிக் கொண்டு, இம்மாதக் கட்டுரைகுள்ளாக போவோம் வாருங்கள். இம்மாதக் கட்டுரையின் தலைப்பு, ''நினைவாய் இருப்பார்''. **"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 55:8)** என்றும், **"துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்" (ஏசாயா 55:7)** என்றும் வேதம் சொல்கிறது.

என் அன்பு நண்பர்களே, பல நேரங்களில் நம்மைக் குறித்தும், மற்றவர்களைக் குறித்தும் நாம் கொண்டிருக்கும் நினைவுகள் தேவன் கொண்டிருக்கும் நினைவுகள் அல்ல. பொதுவாக நாம் நம்முடைய சத்துருக்களையும் துன்மார்க்கம் செய்பவர்களையும் நாம் வெறுக்கிறோம். ஆனால் பிதாவாகிய தேவனுடைய நினைவுகள் அப்படி இருப்பதில்லை. உதாரணமாக லூக்கா 15ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் கெட்ட குமாரன், சொத்தின் தனது பாகத்தை முழுவதுமாக எடுத்துக் கொண்டு போய் அழித்துப் போட்டு, பின்பு புத்தி தெளிந்த போது, தன் தகப்பனிடமாக திரும்பிச் சென்றான். அவன் தூரத்தில் வருகிறதைத் தகப்பன் கண்டபோது, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனை முத்தஞ்செய்தான். தன் தம்பியை தகப்பன் ஏற்றுக் கொண்டார் என்ற செய்தியை மூத்தக் குமாரன் அறிந்த போது, தகப்பனுக்கு விரோதமாக அவன் உள்ளம் தாங்கலடைந்தது. காரணம், தவறு செய்த தன் தம்பியை அவனால் மன்னித்து ஏற்றுக்கொள்ள முடியவில்லை. திரும்பி வந்த கெட்ட குமாரனைக் குறித்து தகப்பன் கொண்ட நினைவுகள் வேறு, மூத்தக் குமாரன் கொண்ட நினைவுகள் வேறு.

சற்று சிந்தித்துப் பார்ப்போம் நண்பர்களே! நம்முடைய வாழ்விலும் எத்தனை முறை நாம் மற்றவர்களிடமாக வெறுப்புணர்வையும், பகையையும் காண்பிக்கிறோம். தேவன் அவர்களை ஏற்றுக் கொண்டாலும் நம்மால் அவர்களை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. இதற்கு முக்கியமான காரணம், நாம் தேவனுடைய உள்ளத்தை அறியவில்லை என்பதும், அறிய விரும்புவதில்லை என்பதும்தான். இன்னொரு உதாரணமாக, தீர்க்கதரிசி நினிவே நகரத்திற்குப் போய், அந்த நகரத்தின் ஜனங்கள் தேவனிடமாய் மனந்திரும்ப வேண்டும் என்ற செய்தியை சொல்லச் சொன்ன போது, யோனா தேவனுடைய சமூகத்தினின்று விலகி தர்ஷீசுக்கு போகும்படி ஓடிபோனான். ஆம் நண்பர்களே, நினிவே நகர ஜனங்களைக் குறித்து தேவன் கொண்ட நினைவுகள் வேறு, யோனா கொண்ட நினைவுகள் வேறு. அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம். மாறாக, அவர்கள் அழிய வேண்டும் என்பது யோனாவின் விருப்பம்.



**ஆம், துன்மார்க்கன் மனந்திரும்பி குணமடைய வேண்டும் என்பதே அவருடைய நினைவாய் இருக்கிறது. நாமும்கூட தேவனுடைய உள்ளத்தைக் கொண்டிருப்பவர்களாக மாறும்படிக்கு, அவருடைய அன்பினால் நாள்தோறும் நம்மை நிரப்பும்படியாக தேவனிடத்தில் மன்றாடி வேண்டுவோம்.**

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## (போடி, சிதம்பரம், ஜெபமலை, கோவில்பட்டி, காங்கேயம் மற்றும் வேலூர்)

கர்த்தருடைய பெரிதான கிருபையால் செப்ட்ம்பர் அக்டோபர் மாதங்களில் போடி, சிதம்பரம், ஜெபமலை, கோவில்பட்டி, காங்கேயம் மற்றும் வேலூர் பகுதிகளில் வாலிபர்களுக்கென்று வாலிபர் எழுப்புதல் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார்/ இக்கூடுகைகளில் சகோதரர் அவினாஷ், சகோதரர் சதீஷ் குமார் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். இதில் சுமார் **2080** வாலிபர்கள் கலந்துகொண்டு எழுப்புதல் தரிசனத்தைப் பெற்று எழுப்புதலின் அக்கினியை பரவ செய்கிறவர்களாக தேவன் அபிஷேகித்து அனுப்பினார். சுமார் **55,000** கைப்பிரதிகள் கொடுத்தனுப்பப்பட்டது. அவரவர் பகுதிகளில் வைராக்கியமாக சுவிசேஷம் அறிவிப்போம் என்று தீர்மானித்து கடந்து சென்றனர்.



























சிந்தனை சிதறல்: பெனிட்டா

# நோவாவை பேழைக்குள் நினைத்தருளினார்...!

நோவாவும் அவருடைய குடும்பமும் அவரோடு இருந்த சகல மிருக ஜீவன்களும் பேழைக்குள் சென்று 150 நாட்கள் கடந்து சென்றன. ஆனால் தண்ணீரின் அளவு குறையவில்லை. 40 நாட்கள் விடாது பெய்த மழையால் இன்னும் எத்தனை நாட்கள் பேழைக்குள் இருப்போம் என்று நோவாவும் அவர் குடும்பமும் கலங்கியிருக்கக்கூடும். எனவே தேவன் பூமியின்மேல் காற்றை வீசப்பண்ணினார். தண்ணீர் வடிய ஆரம்பித்தது. பேழை அரராத் மலையில் போய் தங்கியது. 1 வருடம் 10 நாட்கள் நோவாவும் அவரது குடும்பமும் பேழைக்குள் முடங்கி தனித்திருந்ததாக வேதம் சொல்லுகிறது. தேவனுக்கு கீழ்ப்படிந்த நோவாவையும் அவன் குடும்பத்தையும் அவனுடனே பேழைக்குள் இருந்த சகல காட்டு மிருகங்களையும் சகல நாட்டுமிருகங்களையும் கர்த்தர் நினைத்தருளினார் (ஆதி 8:1).

*அன்பான வாலிபர்களே! "வாழ்வில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் அதே இடத்தில் தான் இருக்கிறேன். தேவன் என்னை மறந்துவிட்டாரோ, என்னை கைவிட்டாரோ" என்று நினைத்து கலங்குகிறீர்களா? நோவாவையும் குடும்பத்தையும் நினைத்தருளின தேவன் உங்களை நினையாமல் போவாரோ?*





ஏற்ற காலம் வரும் வரை தேவன் அன்னாளின் கர்ப்பத்தை அடைந்திருந்தார் என்பதை அறிந்திராத பெனின்னாள், அன்னாளை அலட்சியமாக எண்ணி அவளைத் துக்கப்படுத்தி, விசனப்படுத்தினாள். அந்த வேதனையையும் அவமானத்தையும் தாங்க முடியாமல் கர்த்தருடைய ஆலயத்திற்கு சென்ற அன்னாள், தேவனுடைய சமூகத்தில் மனம் கசந்து மிகவும் அழுது, தன் இருதயத்தை ஊற்றி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி ஒரு பொருத்தனையும் பண்ணினாள். கர்த்தர் அவளை நினைத்தருளினார். அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள். தொடர்ந்து 3 குமாரர்களையும் 3 குமாரத்திகளையும் கொடுத்து கர்த்தர் அவளை நினைவு கூர்ந்தார்! (1 சாமுவேல் 1-20)


*அன்பான வாலிபர்களே! நிந்தைகள், அவமானங்கள் வந்தாலும் கர்த்தரின் வேளைக்காக காத்திருக்க வேண்டும். தேவனை சார்ந்திருக்க வேண்டும். அப்பொழுது அன்னாளை நினைவுகூர்ந்த தேவன் உங்களையும் நினைத்தருள்வார்!*


# அன்னாளின் கண்ணீரை நினைத்தருளினார்...!

# எசேக்கியாவை மரணத்தருவாயில் நினைத்தருளினார்...!

எசேக்கியா பிளவை நோயினால் பாதிக்கப்பட்டு மரணத் தருவாயில் இருந்தான். ஏசாயா தீர்க்கதரிசி ''நீர் மரித்து விடுவீர், உம் வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்தும்'' என்று சொன்னபோது, எசேக்கியா சுவர் பக்கமாக திரும்பிக் கண்ணீரோடு ''கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்'' என்று அழுது ஜெபித்தான். அப்பொழுது கர்த்தர் ''உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்'' என்று எசேக்கியா ராஜாவுக்கு அறிவிக்குமாறு ஏசாயாவிடம் சொன்னார். அத்திப்பழத்து அடையைக் கொண்டு பிளவையின் மேல் பற்று போட்ட போது எசேக்கியா பிழைத்தான் (2 இராஜா. 20:1-7). எசேக்கியாவின் விண்ணப்பத்தை நினைத்தருளி அவனுக்கு 15 வருடங்களை தேவன் கூட்டிக் கொடுத்தார்.

*அன்பான வாலிபர்களே! நீங்களோ, உங்கள் நண்பரோ, உறவினரோ ஏதோ வியாதியின் பிடியில் சிக்கி மரணத் தருவாயில் இருக்கின்றீர்களா? எசேக்கியாவை நினைத்தருளின தேவன் உங்களையும் நினைத்தருள்வார்!*





மோசே தேவனிடத்தில் இருந்து பத்து கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு வர தாமதம் ஆனதினால் இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கென்று ஒரு பொன் கன்றுக் குட்டியை உருவாக்கி, அதை வணங்க ஆரம்பித்தபோது, தேவகோபம் ஜனத்தின் மேல் எழும்பியது. தேவன் மோசேயிடம் ''நீங்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்கள், நான் உங்களை நிர்மூலம் பண்ணுவேன்'' (யாத் 33:5) என்று சொன்னபோது, ''உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும்'' என வேண்டினான் (யாத் 33:13). அப்பொழுது கர்த்தர் ''என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது'' என்று சொல்லி அவர்களை நினைத்தருளினார். ஜனங்கள் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டனர்.

*அன்பான வாலிபர்களே! அன்று மோசே தன் ஜனத்திற்காக மன்றாடி ஜெபித்த போது, கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு இஸ்ரவேல் ஜனங்களை நினைத்தார். இன்று பாவத்தில் திளைத்து கொண்டிருக்கும் உன் தேசத்தின் ஜனத்தைக் கர்த்தர் நினைத்தருள உன் ஜெபம் எத்தனை அவசியம்?*

# மோசேயினிமித்தம் இஸ்ரவேல் ஜனங்களை நினைத்தருளினார்...!

# MOUNT Sinai 2023

(வாலிபர்கள் ஒருநாள் உபவாசக் கூடுகை)

நாள்: **நவம்பர் 11** (சனிக்கிழமை) நேரம்: காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

| இடம் | ஊர் | செய்தியாளர் | தொடர்புக்கு |
|---|---|---|---|
| ஈரோட்டில் | பெத்தானி ஃபெலோஷிப் கத்தீட்ரல் 22, லெனின் தெருவினாய் நகர், நாடார் ரோடு | டாக்டர் அன்புராஜன் | 9976066143, 9750722000 |
| கோவையில் | CSI கிறிஸ்து ஆலயம் திருச்சி ரோடு | பாஸ்டர் பென்ஸ், சகோ. சதீஷ் | 8903405315 9894399599 |
| ஊட்டியில் | உலக எழுப்புதல் ஜெப மையம், 205, கிரீன் பீல்ட், வால்ஷாம் ரோடு | சகோ. ஜோசப் | 9443091947 |
| திருப்பூரில் | TELC ஆலய வளாகம் கோர்ட் வீதி, சபாபதிபுரம் | சகோ. அவினாஷ் | 9944360222 9442082200 9789731768 |
| ஜெபமலையில் | கீழ மாதாபுரம், கடையம் ரோடு | சகோதரி செல்லாராணி அப்பாத்துரை | 9750955548 8270135303 |
| சங்கரன்கோவிலில் | உலக எழுப்புதல் ஜெப மையம், ஷெக்கினா ஹால், முல்லை நகர், இராஜபாளையம் மெயின் ரோடு | சகோ. சுதர்சன் | 9677858766 8344949555 |
| திருநெல்வேலியில் | செல்வி கல்யாண மஹால், முருகன்குறிச்சி, | சகோ. ஞானேஷ் | 9750955548 9488212915 |
| நாகர்கோவிலில் | ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி பார்வதிபுரம், நாகர்கோவில் | சகோ. ராஜேந்திரன் | 9976066143 |
| நாலுமாவடியில் | தேவனுடைய கூடாரம் நாலுமாவடி | சகோ. அந்தோணி தாஸ், சகோ. நல்லதம்பி சார்லஸ் | 9750955547, 04639-353535 |
| தேனியில் | இயேசு பண்ணை, கம்பம் ரோடு | சகோதரி அனிதா பானு, சகோதரி வசந்தி | 9750955548 8489811498 |
| விருதுநகரில் | கிராம மிஷனெரி இயக்கம் கெத்செமனே வளாகம், புல்லக்கோட்டை | பாஸ்டர் ஜான் கே. | 9787768683 9750955548 97157601012 |
| திண்டுகல்லில் | TELC மண்டபம், மெக்கில்ஸ் ரோடு | சகோ. டேவிட் கணேசன் | 6382392446 |
| மதுரையில் | P T R John's Hotel, மாட்டுத்தாவணி, ஆம்னி பஸ் நிலையம் எதிரில் | சகோ. ஜான் வெஸ்லி | 9750955548 |
| இராமநாதபுரத்தில் | வலம்புரி மஹால், பழைய பேருந்து நிலையம் அருகில், ரயில்வே பீடர் ரோடு | பாஸ்டர் ஷாஜின் | 9750955548 |
| கடலூரில் | உலக எழுப்புதல் ஜெப மையம், 93 நேதாஜி ரோடு, (மணிக்கூண்டு எதிரில்) மஞ்சக்குப்பம் | சகோ. ஜெபசிங் | 9965144000 9442885315 |
| விழுப்புரத்தில் | உலக எழுப்புதல் ஜெப மையம், HH Complex, நம்நாடு டெக்ஸ்டைல்ஸ் எதிரில், சாந்தி தியேட்டர் ரோடு | சகோ. பொற்செல்வன் ஆசீர் | 8870517324 9442885315 |

| | | | |
|---|---|---|---|
| பாண்டிச்சேரியில் | உலக எழுப்புதல் ஜெப மையம், கோட்டுப்பாளையம், லாஸ்பேட் (லதா ஸ்டீல் எதிரில்), ECR ரோடு | சகோ. டேவிட் ஜெபசிங் | 8344433800<br>9442885315 |
| நாகப்பட்டினத்தில் | சீயோன் ஜெப ஆலயம் தெற்கு வீதி, திருமாளம், தலைஞாயிறு வேதாரணயம் | சகோ. ராபர்ட் வால்ட்டர் | 9442885315 |
| திருவாரூரில் | ரெகோபெத் IPA Church, மருதம் நகர், விளமல், கூட்டுறவு நகர் Bus stop | சகோ. மேஷாக் | 9976766322 |
| திருச்சியில் | உலக எழுப்புதல் ஜெப மையம், 22, சிவம் பில்டிங், கீழ சத்திரம் ரோடு, தென்னூர் பஸ் ஸ்டாப் அருகில் | சகோ. ஹெயின் வெஸ்லி | 9489775075 |
| தஞ்சாவூரில் | உலக எழுப்புதல் ஜெப மையம், TPS நகர், பாலாஜி நகர் பஸ் ஸ்டாப் மெடிக்கல் காலேஜ் ரோடு | சகோ. ஜெயகாந்தன் | 9489775075 |
| கரூரில் | பாக்யராஜ் திருமண மண்டபம், காமதேனு நகர், வெங்கமேடு | சகோ. ஜெபஸ்டின் சாமுவேல் | 9489775075 |
| பெரம்பலூரில் | உலக எழுப்புதல் ஜெப மையம், 71, MK காம்ப்ளெக்ஸ், வெங்கடேஷ்வபுரம் | சகோ. மைக்கேல் | 9788812428 |
| புதுக்கோட்டையில் | இயேசு கிறிஸ்துவின் பேழை சபை, 30, பாரதி நகர், திருமயம் ரோடு, மலையேடு | சகோ. ஜெயசீலன் | 9489775075 |
| சேலத்தில் | சூசன் அம்மாள் ஹால், அப்சரா இறக்கம், கோட்டை | சகோ. குரூஸ் மாசிலாமணி | 9962085523<br>9442131315<br>9791444788 |
| கிருஷ்ணகிரியில் | விக்னேஷ் ஹால், 3/8-13 சேலம் புறவழிச் சாலை (ராயக்கோட்டை மேம்பாலம் அருகில்) | சகோ. சதீஷ் குமார் | 9962085523<br>9524999711<br>9791444788 |
| நாமக்கல்லில் | கவின் கிஷோர் திருமண மண்டபம், உழவர் சந்தை அருகில், நாமக்கல் டவுன் | சகோ. காட்சன் | 9962085523<br>9489301237 |
| சென்னையில் | BKN ஹால், ரித்தர்டன் ரோடு வேப்பேரி | சகோ. வெஸ்லி மேக்ஸ்வெல் | 9488475315<br>044-28412300 |
| திருவள்ளூரில் | உலக எழுப்புதல் ஜெப மையம், HSR Towers, 2வது மாடி, CSI கெனடி நினைவாலயம் அருகில் | பாஸ்டர் சரவணன் | 7010586464<br>9444972737<br>9488475315 |
| காஞ்சிபுரத்தில் | மெக்லீன் பாரிஷ் ஹால், CSI கிறிஸ்துநாதர் ஆலயம், 101, இரயில்வே ரோடு, அரசு மருத்துவமனை எதிரில் | பாஸ்டர் லூக்காஸ் சேகர் | 8903635315<br>9488475315 |
| வேலூரில் | உலக எழுப்புதல் ஜெப மையம், அஜந்தா மஹால், காம்ப்ளக்ஸ் வெஸ்ட் கிராஸ் ரோடு காந்திநகர், விருதம்பட்டு பெட்ரோல் நிலையம் எதிரில் | சகோ. ரஞ்சித் ஜெபா | 9442979556<br>9442885315 |
| போர்ணாம்பட்டில் | எழுப்புதல் ஜெப கூடாரம், இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு, வி.கே. ரோடு | சகோ. தினகரன் | 9940854125<br>9597927799 |
| இராணிப்பேட்டில் | உலக எழுப்புதல் ஜெப மையம், ரயில்வே ஸ்டேஷன் ரோடு, சீயோன் நகர், (Near Scudder Memorial Hospital) | சகோ. இராபர்ட் ராஜன் | 9976766322<br>7373374733 |
| சித்தூரில் | St. Luke's Telugu Church பாரீஸ் ஹால், | சகோ. சாம் ஜெபராஜ் | 94877 34603 |
| புத்தூரில் | Good Shepherd compound, Puttur. | சகோ. பிரவீன் | 88867 39633 |
| மும்பையில் | World Revival Prayer Center, T/1, Block No.11 90 Feet Road Rajiv Gandhi Nagar Dharavi, Mumbai | சகோ. ஜான் கிளிட்டஸ்,<br>சகோ. ரத்தின சற்குணம் | 9004882470<br>8082410410 |

# ஜெபக்கையேடு

**நவம்பர்**
**2023**






ஜெபம்: பெனிட்டா

1) நாடு முழுவதும் பள்ளிப்படிப்பை பாதியில் கைவிட்டவர்களின் எண்ணிக்கை 12.53 லட்சம். இவர்கள் பள்ளிப்படிப்பை தொடர ஜெபியுங்கள்.

2) உலக அரிசி ஏற்றுமதியில் 40%க்கும் அதிகமான பங்கை கொண்டுள்ள இந்தியாவில், அரிசத் தட்டுப்பாடு வராமல் இருக்கவும் உணவு உற்பத்தி அதிகரிக்கவும் ஜெபியுங்கள்

3) இந்தியாவில் கடந்த 2021 ஆம் ஆண்டு மட்டும், ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 333 பேர் தற்கொலை செய்துள்ளனர். தற்கொலையின் ஆவி நம் தேசத்தை விட்டு வெளியேற ஜெபியுங்கள்.

4) தற்கொலை செய்பவர்களில் 65% பேர் 18 முதல் 45 வயதிற்குட்பட்டவர்களாக இருக்கிறார்கள். இளம் தலைமுறையினரை தற்கொலை செய்ய தூண்டுகிற ஆவிகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

5) வரதட்சணை கொடுமையினால் 23 ஆயிரத்து 179 பேர் தற்கொலை செய்துள்ளார்கள். வரதட்சணை கொடுமை நம் தேசத்தை விட்டு முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபியுங்கள்.

6) இந்தியாவில் தினமும் 82 பேர் கொலை செய்யப்படுகின்றனர். கொலை வெறியின் ஆவிகள் கட்டப்பட ஜெபியுங்கள்.

7) ஒரு மணி நேரத்துக்கு 11 கடத்தல் சம்பவங்கள் நடக்கின்றன. தினமும் 264 பேர் கடத்தப்படுகிறார்கள். கடத்தல் சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

8) ஒரு ஆண்டில் சுமார் 29 ஆயிரம் பேர் கொலை செய்யப்படுகிறார்கள். கொலை செய்ய தூண்டும் ஆவிகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

9) கொலை செய்யும் எண்ணத்துடன் இருக்கும் நபர்கள் விடுதலையாக்கப்படவும், கொலைக் குற்றங்கள் தடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

10) சொத்துப் பிரச்சனை, குடும்ப பிரச்சனை, பணப் பிரச்சனை, தவறான உறவுகள், காதல் தோல்வி போன்ற காரணங்களுக்காக அநேகர் தற்கொலை செய்கிறார்கள். இவர்கள் மனம் திரும்ப ஜெபியுங்கள்.

11) கொலை செய்வதன் மூலம் இரத்தம் சிந்தும்படி தூண்டுகிற சாத்தானின் தந்திரங்கள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

12) இந்தியாவில் உள்ள CBI, NIA மற்றும் ED துறையில் இருக்கும் அதிகாரிகள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

13) விசாரணை ஆணையம் முழுவதிலும் தேவ ஆளுகை உண்டாகவும், அதிகாரிகள் நேர்மையாகவும் பட்சபாதம் இல்லாமல் செயல்படவும் ஜெபியுங்கள்.

14) போதைப் பழக்கத்திற்கு 16 வயது முதல் 25 வயது வரை உள்ள வாலிபர்கள் அடிமையாவது முற்றிலும் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

15) இந்தியாவில் சுமார் 10 கோடி பேர் போதைப் பொருட்களை பயன்படுத்துவதில் அடிமைப்பட்டுள்ளனர். இவர்கள் இந்த அடிமைத்தனத்திலிருந்து வெளிவர ஜெபியுங்கள்.














16) இந்தியாவில் போதை பொருட்கள் பயன்படுத்தும் மாநிலங்களில் பஞ்சாப் முதலிடத்தில் உள்ளது. இந்த மாநிலத்தின் எழுப்புதலுக்காக ஜெபியுங்கள்.

17) போதைப் பொருட்களை பயன்படுத்துவதால் இருதயம், வயிறு, நுரையீரல், மூளை சம்பந்தமான பிரச்சனைகள், ஞாபக சக்தி குறைபாடு போன்ற பக்க விளைவுகள் ஏற்பட்டு மரணம் சம்பவிப்பது தடுக்கப்பட ஜெபியுங்கள்.

18) போதைப் பொருட்களை இந்தியாவிற்குள் கடத்தி வரும் Mafia கும்பல்கள் முடக்கப்பட ஜெபியுங்கள்.

19) சபை தலைவர்கள், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் புதிய அபிஷேகத்தினாலும் வல்லமையினாலும் நிரப்பப்பட ஜெபியுங்கள்.

20) சபைகளில் காணப்படும் ஜாதி பிரிவினைகள் மற்றும் வேற்றுமைகள் முற்றிலும் ஒழிய ஜெபியுங்கள்.

21) சபைகளில் எழுப்புதலுக்கு காணப்படும் தடைகள் நீங்கி, பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட ஜெபியுங்கள்.

22) எழுப்புதலில் 5 விதமான ஊழியர்களை (அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்) தேவன் வல்லமையாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

23) உலகம் முழுவதும் நற்செய்தியை அறிவிக்கும் பணியை சபைகள் உண்மையாக நிறைவேற்ற ஜெபியுங்கள்.

24) சபைகள் மற்றும் ஊழியர்களுக்கு விரோதமாக எழும்பும் பொல்லாத ஆவியின் கிரியைகள், மந்திர வல்லமைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

25) இந்தியாவில் வாக்களிக்கவிருக்கும் 94.5 கோடி மக்களும் தங்களுடைய வாக்கை சரியான முறையில் பதிவிட ஜெபியுங்கள்.

26) இந்தியாவில் உள்ள 94.5 கோடி வாக்காளர்களும் தங்கள் தொகுதிகளில் சரியான நபரைத் தேர்ந்தெடுக்க ஜெபியுங்கள்.

27) 2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் தேவ ஆளுகை உண்டாகவும், கர்த்தருக்கு சித்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

28) தேர்தலுக்கு ஆயத்தப்படும் கட்சிகள், எந்த விதமான சட்ட விரோத செயல்களிலும் ஈடுபடாதபடிக்கு ஜெபியுங்கள்.


29) ஊடகங்கள் தவறான கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு ஜனங்களை குழப்பாதபடிக்கு ஜெபியுங்கள்.

30) தேர்தல் ஆணையம், கட்சி பாகுபாடின்றி சரியான முறையில் செயல்பட ஜெபியுங்கள்.


**தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு கருத்தாய் ஜெபியுங்கள்!**

சரித்திரம்: ஜெயசீலன்

# தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்!







## தாவீதின் அஜாக்கிரதை...

**அன்பு தம்பி, தங்கையரே! நாம் தொடர்ந்து இந்த சரித்திரப் பகுதியில் தாவீதை மையமாக வைத்து தியானித்து வருகிறோம். கடந்த மாதம் மன்னன் தாவீதின் ஆளுமையைப் பற்றி அறிந்து கொண்டோம். இம்மாதம் தாவீது தன் அஜாக்கிரதையால் இழந்தவைகளைப் பற்றி பார்க்கலாம். "ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்" (அப். 13:22) என்று கூறிய ஆண்டவராகிய கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பான காரியத்தை செய்து, தாவீது கர்த்தரின் கோபத்திற்குள்ளானார். இதற்கு காரணம் மன்னன் தாவீதின் அஜாக்கிரதையே!**

### கண்களின் இச்சை

''2 சாமுவேல் 11:1, ராஜாக்கள் யுத்தத்திற்கு புறப்படுங் காலம் வந்தபோது,'' என தொடங்குகிறது. யுத்த காலத்தில் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்பட வேண்டிய நேரத்தில், மன்னன் தாவீது, தன் தளபதி யோவாபை யுத்தத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, எருசலேமில் இருந்து விட்டார். போர்முனையில் அம்மோன் புத்திரரை எதிர்த்து நிற்க வேண்டிய மன்னன் தாவீது, யுத்த காலத்தில் யுத்தத்திற்கு செல்லாமல், அஜாக்கிரதையாய் தன் அரமனை உப்பரிகையின் மேல் உலாவிக் கொண்டிருந்தார். உப்பரிகையில் உலாவிய மன்னரின் கண்களில் அரண்மனைக்கு அருகே வசித்த பத்சேபாள் என்ற அழகிய பெண் தென்பட்டாள். உடனே அப்பெண் யாரென்று விசாரித்து, அவள் தன் வீரர்களில் ஒருவனான உரியா என்பவனின் மனைவி என்று தெரிந்தும், பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக (யாத். 20:17) என்ற கர்த்தரின் நியாயப்பிரமாணத்தை மீறி, கண்களின் இச்சையில் இழுக்கப்பட்டு, அப்பெண்ணை அழைத்து வர சொல்லி அவளுடன் தவறு செய்தார்.

அத்தவறை மறைத்து, அப்பெண்ணை தன் மனைவியாக்கிக்கொள்ள, அவளின் கணவனான உரியாவை, போர் முனையில் கொலை செய்யத் திட்டம் வகுத்து, அப்பாவியும், மன்னனுக்கு மிகவும் விசுவாசமாயிருந்த உரியாவைக் கொலையும் செய்தார். பிறகு பத்சேபாளை அழைத்துவரச்சொல்லி அவனுக்கு மனைவியாக்கிக் கொண்டார். இப்படி, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான காரியத்தை அடுக்கடுக்காய் செய்து, கர்த்தருடைய வார்த்தையை அசட்டைபண்ணி, கர்த்தர் விரும்பாத ஒரு பெரும் பாதகச்செயலை செய்தார் தாவீது.

இதினால் கர்த்தர் மிகுந்த கோபம் மூண்டவராகி, நாத்தான்வேல் என்னும் தீர்க்கதரிசியை அனுப்பி ஒரு உவமையைக்கொண்டு தாவீதின் தவறை உணர்த்தினார். அது மட்டுமின்றி தாவீது செய்த இந்த காரியத்தினால் பட்டயம் அவன் வீட்டை விட்டு விலகாது என்றும், அவன் மனைவிகளுக்கும் இதே போல் நேரிடும் என்றும் கர்த்தர் சபித்தார். அப்பொழுது தாவீது சங்கீதம் 51ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள பாவ மன்னிப்பின் ஜெபத்தை வேதனையோடு பாடி மனம் மாறி கர்த்தாதி கர்த்தரின் மன்னிப்பைப் பெற்றார். ஆனாலும் ‘‘இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும்’’ என்று கர்த்தர் கூறினார். அதைப்போலவே உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண்பிள்ளையை அடித்தார்; அந்தப் பிள்ளை செத்துப்போயிற்று.

தாவீது, ‘‘உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலேயே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து வந்தான்’’ (1இராஜா 15:5) என வேதம் மன்னன் தாவீதைக் குறித்து சாட்சி கூறுகிறது.



அன்பு பிள்ளைகளே! **“தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்” (நீதி. 22:29)** என்ற வார்த்தையின்படி, ஜாக்கிரதையாயிருக்க வேண்டிய காரியங்களில் ஜாக்கிரதையாய் இருங்கள். கர்த்தர் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை ஒருநாளும் கெடுத்துப்போடாதீர்கள். வேலை செய்யும் நேரத்தில் வேலை செய்; விளையாடும் நேரத்தில் விளையாடு (**work while you work and play while you play**) என்ற பழமொழியுண்டு. படிக்க வேண்டிய நேரத்தில் படியுங்கள், உறங்க வேண்டிய நேரத்தில் உறங்குங்கள். இரவெல்லாம் கண் விழித்து, செல்போனில் நேரத்தை செலவு செய்து, கெட்ட நண்பர்களின் தொடர்பு முகநூல், வாட்ஸ்அப் என வாழ்க்கையை வீணாக்கி விடாதீர்கள்.

**அன்பு வாலிபர்களே! தாவீது தன்னுடைய அஜாக்கிரதையால் கர்த்தரின் கோபத்திற்குள்ளானதைப் போல, நீங்களும் கண்களினால் பார்ப்பதை எல்லாம் இச்சித்து, உங்களுக்குள் இருக்கும் ஆவியானவரை துக்கப்படுத்தி பெற்றுக்கொண்ட அபிஷேகத்தை மற்றும் நல்ல வாய்ப்புகளை இழந்து விடாதீர்கள்!**



இன்றைக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கம் குறைந்து கொண்டே வருகிறது. இன்றைய குழந்தைகள் பாடபுத்தகங்களைப் படிப்பதற்குக் கூட யோசிக்கிறார்கள். Result கிடைக்க வேண்டுமென்று கஷ்டப்பட்டு படிக்கிறார்களே தவிர, யாரும் முழுமனதோடு படிக்கிறதில்லை. முன்பெல்லாம் நல்ல புத்தகங்களை வாங்கி அவர்களுடைய வாழ்க்கை முறை, கலாச்சாரம் போன்றவற்றை படிப்பதன் மூலம் அநேக நற்காரியங்களை அறிந்து கொண்டார்கள். இன்றைக்கு எல்லாமே பார்வையிலேயே புரிந்து கொள்வோம் என்று இருக்கும் இன்றைய இளைய தலைமுறையினர் கொஞ்சம் மாத்தி யோசியுங்களேன்...

- புத்தகத்தை வாசிக்கும் பொழுது இதுவரை நமக்கு தெரியாத பல விஷயங்களை கற்றுக்கொள்ள முடியும்.
- புத்தகத்தை வாசிக்கும்பொழுது நம்முடைய அறிவு வளர்ச்சியடைகிறது.
- நல்ல புத்தகங்களை வாசிக்கும் பொழுது நமது உணர்வுகள் கூர்மையடைகின்றன.
- புத்தகங்களை வாசிக்க வாசிக்க நமது மனதில் இருக்கும் தவறான எண்ணங்கள் அகற்றப்பட்டு, சரியான சத்தியங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.
- புத்தகங்களை வாசிக்கும் போது நமது சமுதாயத்திற்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டாகும்.

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (5th Nov.)

### MUMBAI – DHARAVI (5PM – 8PM)
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

### TIRUPUR (4PM – 6:30PM)
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

### TUTICORIN (3PM – 5:30PM)
World Revival Prayer Centre,
Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark : South Police Station to Kamaraj College Rd. 9442885315

### TIRUPATI (3PM)
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (11th Nov.)

### BANGALORE (3PM-5PM)
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar,
Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

### MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur Byepass Road,Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (12th Nov..)

### SANKARANKOIL (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

### MUMBAI - THANE (4PM – 6:30PM)
9004882470

### POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

### KOVILPATTI (3PM -5:30PM)
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

### THENI (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:30PM)
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

### SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road,
(Rathna vilas Stop)
9677858766 | 9442906567

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (19th Nov.)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station RoadZion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre,VK Road.
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
Kamlambal Street,Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (25th Nov.)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex,
71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (26th Nov.)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
World Revival Prayer Centre,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (2:30PM – 5PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

YouTube
Comforter DIGITAL CHANNEL

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 26th NOVEMBER
TIME: 3:00 PM - 5:00 PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH



# குழந்தைகள் தினம்

## நவம்பர் 14, 2023



இந்தியாவின் முதல் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு குழந்தைகள் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தவராக இருந்ததால், அவரது நினைவாகவும் அவரது விருப்பத்தின் பேரிலும், அவரின் பிறந்த தினமான நவம்பர் 14-ம் நாள், குழந்தைகள் தினமாக வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாடு முழுவதும் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு வந்தாலும் இந்தியாவில் குழந்தை கடத்தல்கள், பாலியல் வன்கொடுமைகள், குழந்தைகளை நரபலி செலுத்துதல் போன்ற சம்பவங்கள் மற்றும் குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. அனைத்துக் குழந்தைகளுக்குமே அடிப்படை கல்வியும், அனைத்து உரிமைகளும், பாதுகாப்பும் கிடைக்க வேண்டும் என்பதே குழந்தைகள் தின விழாவின் நோக்கம்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்குவது குழந்தைப் பருவத்தில் நாம் கற்றுக்கொள்ளும் சிறந்த பாடங்கள் தான். வெறும் புத்தகங்கள் மட்டுமே சிறந்த கல்வி என்ற மனநிலையை மாற்றி உங்கள் குழந்தைகளை மற்றவர்களுடன் பழக அனுமதியுங்கள். அப்போது தான் அவர்களுக்கு இடையே சகோதரத்துவமும், உதவும் மனப்பான்மையும் வளரும்.

குழந்தைகள் ஒழுக்கம் நிறைந்த நல்ல குடிமக்களாய் வளர்வதில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியம்.

பரிசுத்த வேதாகமத்திலும் கூட மோசேயின் தாயாகிய யோகெபேத், அந்நிய ஜாதியின் மத்தியில் வாழ்ந்த போதிலும் மோசேயை கர்த்தருக்கேற்ற பயத்தில் சகலத்தையும் போதித்து வளர்த்தாள். தன் தேவனைக் குறித்த சரியான அறிவும் பக்தி வைராக்கியமும் இருந்ததினால் தான் மோசேயின் மூலம் இஸ்ரவேல் ஜனங்களைக் கர்த்தர் விடுவித்தார். சிறந்த தாய்க்கு மோசேயின் தாயாகிய யோகெபேத் தலைசிறந்த எடுத்துக்காட்டு.

இந்த இனிய நாளில் உங்கள் குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்ப, கலரிங் புத்தங்கள், தார்மீக புத்தகங்கள் **(moral books)**, சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க உண்டியல் **(Piggy bank)**, செடிகள் ஆகியவற்றை பரிசளிக்கலாம்.

இயேசு கிறிஸ்துவும் சிறுபிள்ளைகளை மிகவும் நேசிக்கிறார். அதனால் தான் சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது (மாற்கு 10:14) என்று சொல்கிறார்.

**அன்பான பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுக்கு கல்வியை கற்றுக் கொடுப்பதை விட வேத வசனத்தில் வளரவும், கர்த்தருக்கு பிரியமுள்ள பிள்ளைகளாக வளரவும் சிறு வயதிலேயே கற்றுக்கொடுங்கள்.**

நாகமானின் கோபத்திற்கான காரணம் என்ன?

அதனால் வந்த விளைவு என்ன?



# நாகமானின் கோபம்

## கோபத்திற்கான காரணம்:

நாகமானுக்கு தொழுநோய் என்ற தோல் வியாதி இருந்தது. அவன் வீட்டில் பணிபுரிந்த சிறுபெண்ணின் விசுவாசத்தினால் நாகமான் நீண்ட தூரம் பிரயாணம் செய்து நிறைய பரிசு பொருட்களுடன் எலிசாவைப் பார்க்க சென்றான். எலிசா வெளியே வந்து நம்மை வரவேற்பார் என்று எதிர்பார்த்த நாகமான் ஏமாந்து போனான். ஏனென்றால், எலிசா வராமல் உதவியாளரை அனுப்பி, நீ போய் யோர்தான் ஆற்றில் ஏழு முறை மூழ்கி எழும்பினால் குணமாவாய் என்று எலிசா சொல்ல சொன்னதாக சொன்னார். இதைக்கேட்டதும் நாகமான் மிகவும் கோபமானான்.

## விளைவுகள்:

நாகமான் கடுங்கோபத்தோடே, திரும்பிப்போக எண்ணியபோது, அவனது ஊழியக்காரர் அன்பாக பேசி, சமாதானப்படுத்தியதால் யோர்தானில் ஏழுதரம் மூழ்கி எழும்பி சுகம் பெற்றுக் கொண்டான். இதைப் பார்த்த அவனும் அவனுடைய உதவியாளர்களும் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தார்கள். எல்லோரும் அவனுடைய உடலில் ஏற்பட்ட மாற்றத்தை மட்டுமே பார்த்தனர். ஆனால் உண்மை என்னவென்றால் அவருடைய உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றமே பெரிது. ஆம், அவன் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிப்பைப் பெற்றான். எலிசாவிற்கு முன்பு நின்று இதோ இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்று தான் பெற்ற இரட்சிப்பை அறிக்கையிட்டான். (2 இராஜாக்கள் 5: 17).

ஒருவேளை நாகமான் அந்தக் கோபத்தோடே திரும்பிப் போயிருப்பானானால் வாழ்நாள் முழுவதும் குஷ்டரோகியாயிருந்திருப்பான். அவனுடைய ஊழியக்காரர் அவனைப்போல் கோபமடையாமல் அமைதலாய் அவனுக்கு எடுத்துரைத்தார்கள். சாந்தம் நன்மையைக் கொண்டுவரும். கோபம் நஷ்டத்தை ஏற்படுத்தும். கோபம் ஒரு மெய்யான விசுவாசிக்கு அழகல்ல. சாந்தமும், அமைதலுமே அவனுக்கு அழகு.

**"நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்"** (எபேசியர் 4:26)



பேசலாம் வாங்க: வயலா

# Coffee with பத்திரிக்கையாளர்



## பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஸ்திரீ

பரிசுத்த வேதாகமத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் தன்னுடைய செய்கையினால் அறியப்பட்டவர்கள் பலர். அவர்களுள் தன்னை தாக்கிய வியாதியின் பெயராலும், தான் வேதனைப்பட்ட வருஷங்களின் தொகையாலும் அறியப்பட்ட ஒரு பெண் தான் அந்த பெரும்பாடுள்ள ஸ்திரீ. இவர் இயேசுவை நேரில் பார்ப்பதற்கு முன்பே அவரைக் குறித்துக் கேட்ட காரியங்களை அப்படியே விசுவாசித்தாள். சரீரம் பெலவீனமாயிருந்தாலும், விசுவாசத்தில் உறுதியாக இருந்ததினால் மாபெரும் விசுவாச வீராங்கனையாக புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறாள். முதல் மூன்று சுவிசேஷங்களிலும் இவரைக் குறித்து எழுதப்பட்டுள்ளது (மத்தேயு 9:20-22; மாற்கு 5:25-34; லூக்கா 8:43-48). இந்த விசுவாச மங்கையுடனான உரையாடலின் கற்பனைத் தொகுப்பைக் கீழ்க் காண்போம்.

**பத்திரிக்கையாளர்:** வணக்கம் சகோதரியே!

*பெரும்பாடுள்ள ஸ்திரீ :* வணக்கமுங்க!

**பத்தி:** உங்களைப் பற்றிய விவரங்களை சற்று கூறுகிறீர்களா?

*பெ.ஸ்:* சகோதரனே, நான் உதிரபோக்கு வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தேன். அநேக வைத்தியர்களை சந்தித்து, என் ஆஸ்தியை எல்லாம் வைத்தியத்துக்கே செலவழித்தேன். ஆனால் ஒருவராகிலும் என்னை சுகப்படுத்தவில்லை. இந்த வியாதியின் கொடூரம் ஒரு வருடம் இரண்டு வருடமல்ல, பன்னிரண்டு வருடங்கள். நான் கடந்து வந்த பாதை மிகவும் கடினமானது.

**பத்தி:** உங்கள் சகிப்பு தன்மை மிகவும் பாராட்டுக்குரியது. ஒரு சின்ன தலைவலி வந்து விட்டால் செத்து விடுகிறேன் என்று கூறுகிறவர்கள் மத்தியில் வேதனையோடு 12 வருடத்தை எவ்வாறு கடந்தீர்கள்?

*பெ.ஸ்:* ஐயோ! நான் பட்ட பாடுகள் கொஞ்சம் நஞ்சமல்ல. என் வியாதியினிமித்தம் நான் யாரையும் தொடக்கூடாது, யாரும் என்னையும் தொடக்கூடாது. மீறி தொட்டால் தீட்டாகி விடுவார்கள். ஏன் நான் எதாவது பொருளைத் தொட்டால் கூட அது தீட்டாகி விடுமாம் (லேவி 15:25-28). எனவே நான் ஜெப ஆலயத்திற்கோ, எந்த ஒரு பண்டிகைக்கோ, குடும்ப விழாவுக்கோ செல்ல முடியாது, ஏன் வீட்டை விட்டே வெளியே வரமுடியாது. வியாதியின் கொடுமையை விட, தனிமை தான் என்னை மிகவும் தாக்கியது. ஒவ்வொருநாளும் சுகம் பெற பல விதத்தில் முயற்சித்தும் தோல்வியையே கண்டேன். மக்கள் என்னை வெறுத்தார்கள். புறக்கணிக்கப்பட்ட நிலமை, கண்ணீர்... கண்ணீர்... கண்ணீரோடு தான் ஒவ்வொரு நாளையும் கடந்து வந்தேன்.

**பத்தி:** பரிதாபம்... சரி, சுகம் பெற ‘இயேசு’ என்று ஒரு வழி உண்டு என்பதை எவ்வாறு அறிந்துக் கொண்டீர்கள்?

*பெ.ஸ்:* இயேசு குஷ்டரோகிகளை குணமாக்கியதையும், குருடர்களை பார்வை அடைய செய்ததையும், செவிடர்களை

கேட்க செய்ததையும், தீராத கொடிய வியாதிகளை சுகப்படுத்தியதையும் எனது அயலகத்தார் மற்றும் உறவினர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். அப்பொழுதுதான் நானும் வாழ முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் வந்தது. மட்டுமல்ல அவரது வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டவர்கள் கூட சுகம் பெற்றார்கள் (மாற்கு 6:56) என்பதையும் கேட்டறிந்து வியந்தேன். எனவே பிணியாளிகளை சுகமாக்கும் வல்லமை இயேசுவிடம் உண்டென்பதை தெளிவாய் உணர்ந்துக் கொண்டேன். இயேசுவை எப்படியாவது சந்தித்து சுகம் பெற்று விட வேண்டும் என்று என் மனதில் தீர்மானித்துக் கொண்டேன்.

**பத்தி:** இயேசு கிறிஸ்துவை எவ்வாறு சந்தித்தீர்கள்? உங்கள் வீட்டிற்கு அழைத்தீர்களா?

*பெ.ஸ்:* இயசுவை எப்படியாவது சந்திக்க வேண்டுமே என்று என் மனது ஏங்கிக் கொண்டிருந்தது. ஆனால் நானோ 'தீட்டானவள்' என்று சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவள். எனவே என் வீட்டிற்கு இயேசு வருவாரா? என்று எனக்குள் கேள்வி வந்துக் கொண்டேயிருந்தது. அப்படியே இயேசு வந்தாலும், ஜனங்கள் அனுமதிக்க மாட்டார்கள்.



ஓய்வுநாளில் கூனியை சுகமாக்கியதற்காக பாரம்பரியத்தை மீறி விட்டார் என்று இயேசுவோடு வாக்குவாதம் செய்த ஜெப ஆலயத்தலைவனைப் போல யாராவது இயேசுவை நிந்திப்பார்களே. என்னால் எத்தனை பேருக்கு தொல்லை? என்று பலவாறாக எனக்குள் சிந்தித்தேன். பொது இடங்களுக்கு செல்வது எனக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை யாராவது என்னை கண்டுபிடித்து விட்டால், கல்லெறிந்து விடுவார்களே! என்றும் பயந்தேன். ஆனால் இயேசுவைச் சுற்றி எப்பொழுதும் திரளான கூட்டம் இருந்தது. எனவே 'யாருக்கும் தெரியாமல் மறைவாக கூட்டத்தோடு கூட்டமாக சென்று இயேசுவின் வஸ்திரத்தை மட்டும் தொட்டு விட்டு வந்து விட வேண்டும்' என்று தீர்மானித்தேன்.

**பத்தி:** உங்கள் சிந்தனைத் திறன் அபாரம்! பின் என்ன நடந்தது?

*பெ.ஸ்:* என்னுடைய தீர்மானத்தின் படி எல்லாம் நேர்த்தியாய் நடந்தது. நான் எதிர்பார்த்தபடியே இயேசுவின் வஸ்திரத்தை தொட்டவுடன் அவருடைய வல்லமையினால் என்னுடைய உதிரத்தின் ஊறல் அந்த நிமிடமே நின்று விட்டது. நான் சுகம் பெற்று விட்டேன். நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. துள்ளி குதிக்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் என்னுடைய வியாதி எல்லாருக்கும் தெரிந்தால், எனக்கு தானே அவமானம் என்று என்னை கட்டுப்படுத்திக் கொண்டேன். அந்த இடத்தை விட்டு நான் நகர்ந்து விட முயற்சிக்கையில், இயேசு கிறிஸ்து என் வஸ்திரங்களைத் தொட்டது யார்? என்று ஒரு கேள்வியைக் கேட்டு விட்டார். அவ்வளவு தான், என் உள்ளம் நடுங்கி விட்டது. நான் அவர் முன்பாக விழுந்து உண்மையையெல்லாம் சொல்லி விட்டேன். பின் இயேசு என்னைப் பார்த்து; உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார். அப்புறம் தான் என் உள்ளத்தில் ஆறுதலும், சந்தோஷமும், சமாதானமும் நிறைந்தது. இயேசுவை சந்தித்த பின் தான் என் கண்ணீரின் வாழ்வு மறைந்து மகிழ்ச்சியின் வாழ்வு மலர்ந்தது.

**பத்தி:** என்ன அருமையான சாட்சி! நன்றி சகோதரியே...

*பெ.ஸ்:* நன்றி விடைபெறுகிறேன்.

**பத்தி:** விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது என்று, தான் சுகம் பெறும் முன்னே இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டதை அப்படியே விசுவாசித்து அதினால் பெற்றுக் கொண்ட தெய்வீக சுகம்! 'வியாதி வந்து விட்டதே' என்ற தாழ்வு மனப்பான்மை தன்னை மேற்கொள்ள விடாமல் தோல்வியை வென்ற தைரிய மனப்பாங்கு! பல மருத்துவர்களை சந்தித்தும் சுகம் பெறவில்லை என்று சோர்ந்து போகாமல் சுகம் பெறும் வரை மேற்கொண்ட விடாமுயற்சி ஆகிய காரியங்கள் பன்னிரண்டு வருஷம் பெரும்பாடுள்ள ஸ்திரீயிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை.

**அன்பு வாலிபர்களே! யாரோ ஒருவர் இயேசுவைக் குறித்து கூறிய சாட்சி, ஒரு பெரும்பாடுள்ள ஸ்திரீயின் வாழ்வில் மாபெரும் அற்புதம் நடைபெற காரணமாயிருந்தது. நீங்களும் இயேசு செய்த நன்மைகளை உங்கள் நண்பர்கள் அயலகத்தாருடன் பகிரும் போது கண்டிப்பாக அது மிகுந்த பலனைத் தரும்.**

# செ ய் தி க ள்

# இஸ்ரேலின் புதிய அவதாரம்

## பதிவிறக்கம் செய்யவோ, அழுத்தவோ வேண்டாம்

### ஆன்லைன் விளம்பரம் மூலம் போனில் ஊடுருவும் ஸ்பைவேர்

எதையும் பதிவிறக்கம் செய்யாமல், எந்த இணைப்பையும் அழுத்தாமல், ஆன்லைன் விளம்பரம் மூலமாக மட்டுமே உங்கள் கணினி, செல்போனை உளவு பார்க்கும் ஸ்பைவேர் மென்பொருளை இஸ்ரேலிய நிறுவனம் தயாரித்துள்ளது.

உளவு மென்பொருள்களுக்கு பெயர் போன நாடு இஸ்ரேல். இந்நாட்டின் பெகாசஸ் உளவு மென்பொருள் ஓரிரு ஆண்டுகளுக்கு முன் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் அரசியலில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. ஆளுங்கட்சிகள் இந்த உளவு மென்பொருள் மூலமாக எதிர்க்கட்சி தலைவர்களை வேவு பார்ப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த உளவு மென்பொருள், அதிக பாதுகாப்பு நிறைந்த ஆப்பிள் செல்போனிலும் ஊடுருவும் திறன் கொண்டது.

இந்நிலையில், அடுத்த வெர்ஷனாக இன்சாநெட் எனப்படும் இஸ்ரேலிய தொழில்நுட்ப நிறுவனம் ஷெர்லாக் எனும் புதிய உளவு மென்பொருளை உருவாக்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பொதுவாக இதுபோன்ற தீங்கிழைக்கும் ஸ்பைவேர்கள் ஏதாவது லிங்கை அழுத்தினாலோ அல்லது ஏதாவது ஒரு ஆப்-ஐ பதிவிறக்கம் செய்தாலோ அதன் மூலம் போனில் ஊடுருவும். ஆனால் ஷெர்லாக், ஆன்லைன் விளம்பரம் மூலமாக நமது கணினி அல்லது செல்போனில் ஊடுருவும் திறன் கொண்டது.

இப்போது நீங்கள் ஏதாவது ஒரு பொருளை வாங்க ஆன்லைனில் தேடினால் அதன் பிறகு எந்த வெப்சைட்டை திறந்தாலும், நீங்கள் பொருள் தொடர்பான விளம்பரங்கள் உங்களை துரத்திக் கொண்டே இருக்கும். இதற்காக அதிநவீன விளம்பரம் நெட்வொர்குகள் உள்ளன. இந்த ஆன்லைன் விளம்பரம் மூலமாகத்தான் ஷெர்லாக் உங்கள் போனில் ஊடுருவும். இந்த ஸ்பைவேரை புகுந்து விட்டால், அது உடனடியாக தகவல்களை சேகரித்து, ஸ்பைவேரை அனுப்பியவருக்கு தகவல்களை கடத்திவிடும். இதன்மூலம் செல்போன் வைத்திருப்பவரின் முழு நடமாட்டத்தையும் கண்காணிக்க முடியும்.

இந்த ஸ்பைவேரை விற்பனை செய்ய இஸ்ரேலிய அரசு அனுமதி தந்துள்ளதன் மூலம், இணைய உலகில் மற்றொரு அச்சுறுத்தலான ஸ்பைவேராக மாறி உள்ளது. – **தினகரன், 26 செப்டம்பர் 2023.**



- 2011 முதல் 2023 வரை, 74 அரசாங்கங்கள் ஸ்பைவேர் தொழில்நுட்பத்தை பெறுவதற்கு வணிக நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளன.
- ஸ்பைவேரை கண்காணிப்பதற்கும், உளவுத் தகவல்களைச் சேகரிப்பதற்கும், குற்றம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் அரசாங்கங்கள் பயன்படுத்தக்கூடும்.
- முக்கிய பதவியில் இருப்பவர்களை கண்காணிக்கவும் சில நிறுவனங்கள் ஸ்பைவேரை பயன்படுத்தும்.
- ஹேக்கர்கள், இணைய வழி மோசடி பேர்வழிகள் பணம் திருடவும் ஸ்பைவேர் பயன்படுத்துவதுண்டு.
- இன்சாநெட் நிறுவனத்தின் தகவல்படி, ஷெர்லாக் ஸ்பைவேரின் விலை சுமார் ₹ 50 கோடி.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

யோசனையில் பெரியவர்!

நிகழ்வு: ஜாய்லின் ஜாண்

# கன்மலையின் தண்ணீர்

வேதாகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிராக யுத்தங்களும், போராட்டங்களும், நெருக்கங்களும் வந்த போது அவர்களுக்காக கர்த்தர் கையாண்ட யுக்திகளைப் பற்றி இந்த ''யோசனையில் பெரியவர்'' என்னும் தொடரில் நாம் வாசித்து வருகிறோம். இம்மாதம், இஸ்ரவேல் ஜனங்கள் குடிக்க தண்ணீர் இன்றி நெருக்கத்தில் இருந்தபோது யோசனையில் பெரியவரான ஆண்டவர் மோசேக்கு அளித்த யோசனையினால் நிகழ்ந்த அற்புதத்தைப் பற்றிப் பார்க்கவிருக்கிறோம்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்ததிலிருந்து எண்ணற்ற அற்புதங்களை அவர்களுக்குச் செய்தார். அவற்றுள் செங்கடலை பிளந்து கடக்கச் செய்தல், மாராவின் தண்ணீரை மதுரமாக்குதல், வானத்திலிருந்து மன்னாவை பொழிதல் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவைகளுக்கு பின்பு யாத்திராகமம் 17ஆம் அதிகாரத்தில் கர்த்தரின் சொல்படி இஸ்ரவேலர்கள் சீன் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, ரெவி தீமிலே தங்கினார்கள். நீண்ட தூரம் பிரயாணப்பட்டு களைப்பாய் வந்தவர்களுக்குத் தங்கள் தாகத்தைப் போக்கிக் கொள்ள அங்கே குடிக்க தண்ணீர் இல்லை. இதனால் இஸ்ரவேல் ஜனங்கள் மிகவும் கோபம் கொண்டு மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து வாதாடினர். அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி ''ஆண்டவரே தண்ணீர் இல்லாததினால் இந்த ஜனங்கள் என்னைக் கல்லெறிந்து கொல்லப் பார்க்கிறார்களே'' என்று முறையிட்டான் (யாத் 17:4).


அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலர்களின் இந்த நெருக்கமான சூழ்நிலையையும் மோசேயின் அவல நிலையையும் போக்க, மோசேக்கு ஒரு சிறந்த ஆலோசனை தந்து வழி நடத்தினார். அதென்னவென்றால் ''நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்'' (யாத் 17:5,6). கர்த்தர் கற்பித்தபடியே மோசே சில மூப்பரைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு, நைல் நதியை அடித்த தன் கோலையும் கையிலே பிடித்துக் கொண்டு ஓரேபில் இருக்கிற கன்மலைக்குச் சென்று, அங்கே கர்த்தர் சொன்னபடி இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாக, தன் கையில் இருந்த கோலைக் கொண்டு கன்மலையை அடித்தான். அப்பொழுது கன்மலை பிளந்து திரளான தண்ணீரை சுரந்தது. அதினால் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தாகத்தை தீர்த்துக் கொண்டார்கள்.

**அன்பான வாலிபர்களே நெருக்கத்தின் மத்தியில் போராட்டத்தின் மத்தியில் நீங்கள் இருக்கும் போது இஸ்ரவேல் ஜனங்களைப் போல முறுமுறுக்காமல், மனிதர்களிடம் வாதாடாமல், மோசேயைப் போல இம்மட்டுமாய் உங்களை அற்புதமாய் நடத்தி வந்த கர்த்தரை நோக்கி முறையிடுங்கள். அவரே நம் நித்திய கன்மலை. அவரே நமக்கு ஒத்தாசை அனுப்புகிறவர். அவரிடத்திலிருந்து நமக்கு சகலவித ஆசீர்வாதங்களும் புரண்டோடும். நித்திய கன்மலையாகிய கர்த்தரை நோக்கிப்பாருங்கள்! உங்கள் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படும்!**



Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 10 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

வேதாகம தேசங்கள்: கெத்சி கிளார்வின்



# பத்மு தீவு

அன்பு வாலிபர்களே! வேதாகம தேசங்கள் என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள சில தேசங்களையும் அதின் சிறப்புமிக்க பட்டணங்களையும் குறித்து பல சுவாரஸ்யமான தகவல்களை நீங்கள் வாசித்து அறிந்து வருகிறீர்கள்!

நாம் கடந்த மாதங்களில் பார்த்த பல தேசங்கள் போன்று இவ்விடம் பிரபலமிக்கது அல்ல என்றாலும், வேதத்தை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆம்! அதுவே "பத்மு தீவு".

## அறிமுகம்:

பத்மு தீவு ஏஜியன் கடலில் உள்ள ஒரு கிரேக்க தீவு ஆகும். இது டோடெகனீஸ் வளாகத்தின் வடக்குப் பகுதியில் உள்ள தீவுகளில் ஒன்று.

- இயேசுவின் சீஷரில் ஒருவரான அபோஸ்தலனாகிய யோவான், கிறிஸ்துவை பிரசங்கித்ததினால் பல உபத்திரவங்களுக் குள்ளானார். பின்னர் அவருக்கு மரண தண்டனை அளிப்பதற்கு நிகராக இந்த பத்மு என்னப்பட்ட தீவில் கொண்டுபோய் விடப்பட்டார்.
- வாழ்க்கை முடிந்ததென்று நினைத்த இடத்தில் தான், இன்று வேதாகமத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்துதலின் வார்த்தைகள் அவருக்கு கிடைத்தது.

"உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தேன்." (வெளி. 1:9)

## சிறப்பம்சங்கள்:

- கிரேக்க நாட்டில் உள்ள இந்த பத்மு தீவு, உலகின் மிக முக்கியமான புனித ஸ்தலங்களில் ஒன்றாகும்.
- இது இயற்கை அழகு மிக்க ஓர் இடமாகும். பல சுவாரஸ்யமான இடங்களும் இங்கு உள்ளன.
- "தி அப்போகலிப்ஸ் குகை" (THE CAVE OF THE APOCALYPSE) அதில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.
- இந்த குகையிலிருந்துதான் யோவானுக்கு மாபெரும் வெளிப்பாடுகள் கிடைத்தன.
- மேலும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இது யுனெஸ்கோவால் (UNESCO) உலக பாரம்பரியத் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்பு வாலிபரே! அன்றைக்கு ஊழியமும் வாழ்க்கையும் முடிந்தது என்ற கட்டத்தில் வந்து நின்ற யோவானுக்கு கர்த்தர் கொடுத்த தரிசனங்கள், எவரும் பெறாத பொக்கிஷமாகும். இன்றைக்கும் உன் வாழ்க்கை முடிந்தது என்று நினைக்கிறாயோ? திடன்கொள், யோவானை அற்புதமாய் நடத்தியவர் உன்னையும் அதிசயமாய் நடத்துவார்.

